ஓம்
திருச்சிற்றம்பலம

செந்தமிழ்ச் செல்வி

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினின்றுந்
திங்கள்தோறும் வெளிவருவது

சிலம்பு ௯	மெய்கண்டான்யாண்டு-௭௱௨ ஐப்பசித் திங்கள் 1930ஆ அக்டோபர்மீ—நவம்பர்மீ	பரல் ௰

திருச்சிற்றம்பலம்

திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம்

அருக்கன் பாதம் வணங்குவ ரந்தியில்
அருக்க னாவா னரனுரு வல்லனோ
இருக்கு நான்மறை யீசனை யேதொழுங்
கருத்தி னைநினை யார்கன் மனவரே.

திருநாவுக்கரசு சுவாமிகள் தாமிருந்த காலத்தில் மக்களில் ஒரு பகுதியார் வெளியே கண்ணுக்குக் காணப்படுகின்ற ஞாயிற்றினுடைய உருவத்தில் இறைவனை வணங்காமல், அந்த அருக்கனையே இறைவன் என வணங்கும் வழக்கத்தைக் குறித்து அவர்கள்மேல் இரங்கி இந்தத் தேவாரப்பாட்டைப் பாடியருளினார்.

அந்தியில்—(ஒரு பகுதிமக்கள்) மாலைக்காலத்தில்

அருக்கன்பாதம்—ஞாயிற்றினுடைய திருவடிகளை

வணங்குவர்—வழிபடுவார்கள்

அருக்கனாவான்—ஞாயிறு எனப்பட்டவன்

அரனுரு அல்லனோ—இறைவனுடைய உருவம் ஆகமாட்டானோ, அதாவது, இறைவனுடைய உருவம் ஆவான்

கன்மனவரே—அப்பேர்ப்பட்ட கல்லைப்போலும் கடினமான மனத்தை உடைய மக்கள்

இருக்கு நான் மறை ஈசனை=இருக்கு முதலிய நான்கு வேதங்களிலும் தலைவனாகக் கூறப்பட்ட சிவபெருமானை முழுமுதற் கடவுளாக வணங்கும்

கருத்தினை நினையார்=உண்மையான கருத்தைத் தங்கள் மனதில் நினைக்கமாட்டார்கள் ஐயோ இது என்ன அறியாமை !! 'ஐயோ இது என்ன அறியாமை' என்பது குறிப்பெச்சம்.

இறைவன், மண், நீர், தீ, வளி, வெளி, ஞாயிறு (சூரியன்) திங்கள், உயிர் என்னும் எட்டு உருவங்களிலு மிருப்பவன். இந்த உருவங்களில் அவனுடைய அருள்வலி (அருட் சத்தி) விளங்குகின்றது. ஆனால் அவனுடைய அருள்வலி இந்த எட்டு உருவங்களிலும் அடங்காமல் அவைகளுக்கு அப்பால் சிற்றறிவுடைய நாம் எண்ணக்கூடாத அளவில் உள்ளது. எட்டு உருவங்களிலும் உள்ளக் கண்ணுக்கு மிக்க ஒளியுடன் விளங்குவதான உருவமானது ஞாயிறு. திங்களும் அனலும் ஞாயிறுக்கு அடுத்து ஒளியுடன் விளங்கும் உருவங்கள். மக்கள் அந்த ஞாயிற்றினில் இறைவனிருப்பதாக நினைத்து இறைவனை வழிபடல் வேண்டும் என்று வேதாகமங்கள் கூறுகின்றன. ஞாயிற்றினை இறைவனாக வழிபடுதல் தானாக இயங்குகின்ற உயிரினைவிட்டு அந்த உயிருக்கு இருப்பிடமாயும் உயிராலியங்குவது மாகிய உடலை வழிபடுதல் போலாகும். திருநாவுக்கரசு சுவாமிகள் தாம்பாடிய வேறொரு தேவாரப் பாட்டில் "அங்கதிரோனவனை யண்ணலாக் கருதவேண்டாம்" எனக் கூறுதல் காண்க.

மா. வே. நெல்லையப்ப பிள்ளை.

நால்வர்களும் கல்வெட்டுகளும்

[திருவாளர் அட்வகேட் C. M. இராமச்சந்திரஞ் செட்டியார் அவர்கள் எழுதியன]

முகவுரை.

நமது நாட்டில் சரித்திர ஆராய்ச்சி மிகக் குறைவு. சமீப காலத்தில்தான் சில புலவர்கள் சரித்திர ஆராய்ச்சியை மேற்கொண்டு நூல் எழுத முற்பட்டிருக்கிறார்கள். வெகுகாலம் வரை பெரியோர்களுடைய வரலாறுகள் தெரிவதற்குக் கர்ண பரம்பரைக் கதைகளும் சில பழையஏட்டுப் பிரதிகளுமே ஆதா

ரமாயிருந்தன. இவைகளை வைத்துக்கொண்டு விநோத ரசமஞ்சரி போன்ற காதுக்கினிய கதைகளைச் சரித்திரங்கள்போல எழுதிவிட்டனர். இவ்வகை நூல்களினால் நமது சரித்திரஞானம் எத்துணை தாழ்ந்திருந்தது என்பது அறியலாகும்.

பொதுவாக இது இருக்க, நாம் பொன்னேபோல் போற்றும் நமது அரும்பெரும் சமயாச்சாரியர்கள் நால்வர்களுடைய சரித்திர ஆராய்ச்சி எம்மட்டில் இருக்கிறதென்பதைக் கவனிப்போம். நாளதுவரை பற்பல புலவர்சிகாமணிகள் நால்வருடைய சரிதங்களை எழுதியும் எழுதிக்கொண்டும் இருக்கிறார்கள். எல்லா நூல்களையும் எடுத்துப் பார்த்தாலும் ஒருவர் சொன்னவற்றையே மற்றொருவர் பெருக்கியும் குறுக்கியும் எழுதுகிறார்களே தவிர யாதொரு நூதனஆராய்ச்சியும் புது ஆதாரங்களைத் தேடிக் கண்டுபிடித்தவைகளும் காணமுடியா. மூவர்களுடைய சரித ஆராய்ச்சி செய்த எல்லா நூலாசிரியர்களும் பெரிய புராணத்தையும் அதை ஆதாரமாகக் கொண்டு எழுதப் பெற்ற ஏனைய புராணாதி நூல்களையும்கூட ஆதாரமாகக்கொண்டு எழுதியிருக்கின்றனர். மணிவாசகப் பெருமான் சரிதத்திற்கு, திருவிளையாடல், திருவாதவூரர் புராணம், திருப்பெருந்துறைப் புராணம் இவைகளை ஆதாரமாக வைத்துக் கொள்ளுகிறார்கள். தற்காலத்தில் உட்சான்று புறச்சான்று என்றவகைகளிலே ஆராய்ச்சிகள் செய்து வரும் நிபுணர்கள் மேற்கூறிய புராணாதிகளோடு நால்வர்கள் அருளியுள்ள பாசுரங்களிலிருந்து ஆராய்ச்சி மூலமாகப் பெற்ற உண்மைகளை வைத்துச் சரிதங்களைப் புதுக்கியிருக்கிறார்கள். சில புலவர்கள் இவ்வகைகளோடு ஆங்காங்கே வழங்கிவரும் கர்ண பரம்பரைகளையும் ஆடல் பாடல்களையும் ஆதாரமாக வைத்துக்கொண்டு முற்சொன்னவாறு கிடைத்த சரிதபாகங்களை உறுதிப் படுத்துகிறார்கள். இம்மூன்று வகைகளில் மட்டும் சரித ஆராய்ச்சி ஏற்பட்டு வந்திருக்கிறது.

மேலும் நால்வருடைய கால ஆராய்ச்சி ஒன்று புதிதாக எல்லாராலும் எடுத்தாளப்பட்டு வருகிறது. ஏனெனில், நம் புலவர் பெருமக்களுடைய கால அளவு தெரியாத குறையை மேற்

றிசையாளர்கள் (ஐரோப்பியர்) எடுத்துக் காட்டி அடிக்கடி ஏள னம் செய்ததே நம் நிபுணர்களுக்கு ஏற்ற தூண்டுகோலாக நின் றது. இக்கால அளவிற்கும் நம் பெரும் ஆசிரியர் சுந்தரம் பிள்ளை அவர்கள் உலகிற்கு உதவியிருக்கும் ஞானசம்பந்தர் கால ஆராய்ச்சி ஒன்றே அடிப்படையான ஆராய்ச்சியாக நின்று அதன்பேரில் ஏனைய புலவர்கள் தங்கள் எண்ணங்களைக் கட்டிக் கொண்டு வந்து இருக்கிறார்கள். மணிவாசகப் பெருமானு டைய காலவரையறையைப் பற்றி இன்னமும் வாதப் பிரதிவா தங்கள் ஒழுங்குபெறாமல் நிற்கின்றன. இக்குறைகள் எல்லா வற்றிற்கும் நாம் புது வழிகளில் நம் கண்ணையும் கருத்தையும் திருப்பாமல் இருப்பதே காரணமாகும்.

ஏனைய நாகரீகம் பெற்ற மொழியாளர்களைப் போன்று நம் முன்னோர்களும் சரித்திர ஞானங் கொண்டவர்களே. தாம் அறிந்துகொண்ட பொருள்களும் எண்ணின எண்ணங்களும் தமது பிற்காலத்தினர் அறியவேண்டும் என்ற அவா கொண்ட வர்கள். அதற்காகத் தாம் இயற்றிய நூல்களை ஏடுகளில்எழுதி வைத்தார்கள். ஆனால் ஏடுகள் வெகுகாலம் நில்லாமல் சிதிலம் அடைந்துவிடும் என்பதை அறிந்து நிரந்தரமாக (சந்திராதித்தர் உள்ளவரை நிலைபெறுவதாக) என்றது அவர்கள் வாக்கு இருக்க வேண்டும் என்பவற்றைக் கற்களிலும் செம்புத் தகடுகளிலும் செதுக்கி வைத்தார்கள். இதனாலே 'கல்மேலெழுத்துக்கு நேர்" என்ற பழம் வாக்கும் ஏற்பட்டுவிட்டது. அவ்வித கல் சாச னங்களும் செம்பு சாசனங்களும் ஏராளமாக நமது நாட்டில் கிடைக்கின்றன. எந்தப் பழைய ஆலயம் கண்டாலும் கற்சாச னம் இல்லாமல் போகவில்லை. கற்றறியாத நம் பாமரமக்கள் அவைகளைப் பிரமலிபி என்றும் பூதங்களால் எழுதிவைக்கப்பட் டன என்றும் கொள்கை கொண்டிருக்கிறார்கள். இச்சாசனங் களை ஆதியில் மேற்கத்திய ஜர்மானிய புலவர்கள்தான் பார்வை யிட்டு அவைகளின் பெருமைகளை அறிந்தார்கள். பிறகு நம் நாட்டுப் புலவர்களும் சிறிது சிறிதாக அவைகளின் பெருமை களை அறிந்து, சரிதங்களைத் தொகுக்க ஆரம்பித்திருக்கிறார்கள்.

ஆயிரக்கணக்காக இருக்கும் இக்கல்வெட்டுகளில் அருமை

யான புதையல்கள் எவ்வளவோ உண்டு. இதுவரைக்கும் நாம் அறிந்து கொள்ளாத தேச வழக்கம், இராஜரீக முறைகள், ஊர் ஆட்சி, பெரியோர் சரிதங்கள்; அரசர்களின் சரிதங்கள், புலவர் சரிதங்கள், அன்னூர் செய்யுட்கள், வகுப்பு வழக்கங்கள், கைத் தொழில் முறைகள் இவை முதலான பல பொருள்களை அறிகி ரோம். இவைகளிலே நம் ஆராய்ச்சிக்கு எடுத்துக்கொண்டது நால்வருடைய சரித உண்மைகள். இவைகளைப் பற்றியும் நூற் றுக்கணக்கான கல்வெட்டுகள் உண்டு. அவைகளைத் தொகுத்து அவைகளிலிருந்து நாம் அடையக்கூடிய பலன்களை எடுத்தெழு துவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

மேலும் நாம் ஆராயக் கிடைத்தவை நாளதுவரையில் அர சாங்கத்தாராலே வெளியிடப்பட்டிருக்கும் சாசனங்களேயாகும். அரசாங்கத்தார் இதற்காகச் சில உத்தியோகஸ்தர்களை நியமித்து ஆலயங்களிலுள்ள கல்வெட்டுகளைத் தேடிப் பிரதிகள் எடுக்கிரார் கள். பிறகு அவைகளைப் பதிப்பிக்கிரார்கள். நாளதுவரை ஆயி ரக்கணக்கான பிரதிகள்எடுத்திருக்கிரார்கள். இன்னமும் எடுக் காதவைகள் அநேக ஆயிரம் உண்டு. நாளது (1930) ஆண்டு வரை பல்லாயிரம் எடுத்தும் 1899-ம் ஆண்டுவரை எடுத்த பிரதி களைமாத்திரம் பதிப்பித்திருக்கிரார்கள். பதிப்பு விஷயம் மிகவும் நிதானமாகி யிருப்பது விசனிக்கத்தக்கதே. அவைகளையும் பதிப்பித்தால் நமது ஆராய்ச்சிக்குப் பெரிதும் பயன்படும். ஏனைய வருடங்களுக்குக் குறிப்புகள் மாத்திரம் பதிப்பித்திருக் கிரார்கள். அவைகளிலிருந்து பல விஷயங்கள் எடுத்தாளப் பெற்றிருக்கின்றன.

மேற்கு நாடுகளில் இவ்வித ஆராய்ச்சிகளுக்காக அரசாங் கத்தாரைப் புலவர்கள் எதிர்பார்ப்பதில்லை. புலவர்கள் ஒன்று சேர்ந்து சங்கங்கள் கூட்டிப் பொருள் சேர்த்து அச்சங்கங்கள் மூலமாக வேலை செய்வார்கள். அவ்விதம் நம் நாட்டிலும் ஆராய்ச்சிச் சங்கங்கள் ஏற்பட்டால் அவைகளின் மூலம் நம் நாடு பெரும் பயன் அடையும் என்பதில் ஐயமில்லை. அரசாங் கத் தேர்தல் விஷயத்தில் ஆயிரக்கணக்காகப் பொருள் விர யம் செய்யும் நம் பெருமக்கள் இவ்வித அருமைத் தொழிலில்

ஏன் சிறிதாகிலும் உதவி புரிய மாட்டாதவர்களாய் இருக்கிறார்களோ என்பது அறியக்கூடவில்லை.

1. திருஞானசம்பந்த சுவாமிகள்

இப்பெரியாருடைய சரித்திரம் எல்லாத் தமிழ் மக்களுக்கும் தெரிந்ததே. பெரிய புராணத்தில ஒரு பெரும்பாகம் அவர் சரித்திர வரலாற்றைக் கூறுகிறது. மேலும் திருவிளையாடலில் ஒரு படலம் அவர் சரித்திரத்தில் ஒரு விஷயத்தைக் கூறுகிறது. (வன்னியும் கிணறும் லிங்கமும் அழைத்த படலம்) சீகாழியில் கௌணிய கோத்திரத்தில் சிவபாத இருதயர் என்பவர்க்கும் பகவதியாருக்கும் புதல்வராய் அவதரித்து மூன்றாம் ஆண்டில் ஞானப்பால் பெற்றுத் தலயாத்திரை செய்து, தேவாரப் பதிகங்கள் அருளினார். மறுபடியும் சீகாழி வந்து உபநயனம் செயயப் பெற்றார். அக்காலத்தில் அப்பர் சுவாமிகள் தம்மைத் தரிசிக்க வர இருவரும் சிலநாள் ஒருங்கு இருந்தனர். அப்போது சம்பந்தருக்கு 7-வயதும், அப்பருக்கு வயது முதிர்ந்தும் இருக்கலாம். பிறகு சுவாமிகள் பல தலங்கள் சுற்றிச் சென்று தம் 11, 12 வயதில் திருசசெங்காட்டங்குடியில் சிறுத்தொண்டரைக் கண்டார். சுவாமிகளைச் சிறுத்தொண்டர் உபசரித்ததை நினைந்து தம் பதிகத்திலும்:

> "பைங்கோட்டு மலர்ப்புன்னைப் பறவைகாள் பயப்பூரச்
> சங்காட்டந் தவிர்த்தென்னைத் தவிராநோய் தந்தானே
> செங்காட்டங் குடிமேய சிறுத்தொண்டன் பணிசெய்ய
> வெங்காட்டு ளனலேந்தி விளையாடும் பெருமானே."

> "செந்தணல்பூம் புனல்வாய்ந்த செங்காட்டங் குடிமேய
> வெந்தநீ றணிமார்பன் சிறுத்தொண்டன் அவன்வேண்ட
> வந்தண்பூங் கலிக்காழி யடிகளையே யடிபரவும்
> சந்தங்கொள் சம்பந்தன் றமிழுரைப்போர் தக்கோரே."

என்று அருளியிருக்கிறார். அக்காலத்தில் சிறுத்தொண்டர் குமாரர் சீராளதேவர்க்கு மூன்று வயது என்பதைப் பெரிய புராணத்தில்:—

"வந்தவளர்-மூவாண்டின் மயிர்வினைமங் கலஞ்செய்து
தந்தையா ரும்பயந்த தாயாருந் தனிச்சிறுவர்
சிந்தைமலர் சொற்றெளிவிற் செழுங்கலைகள் பயிலத்தம்
பந்தமற வந்தவரைப் பள்ளியினி லிருத்தினார்"

"அந்நாளிற் சண்பைநகர் ஆண்டகையார் எழுந்தருள
முன்னாக வெதிர்கொண்டு கொடுபுகுந்து முந்நூல்சேர்
பொன்மார்பிற் சிறுத்தொண்டர் புகலிகா வலனார்தம்
நன்னாமச் சேவடிகள் போற்றிசைத்து நலஞ்சிறந்தார்"

என்பவையால் தெரிகிறது. பிறகு பல தலங்கள் சுற்றிவந்து, தம் ஊர் வந்தனர். அங்கு அப்பரை விட்டு நீங்கி, மங்கையர்க்கரசியாரும் குலச்சிறையாரும் அழைக்க மதுரை சென்று சமணரை வென்று, பாண்டியன் சுரம் நீக்கி, சமணத்திலிருந்து சைவத்திற்குத் திருப்பினார். பிறகு பல தலங்களைத் தரிசித்து, திருப்பூந்துருத்தியில் அப்பரைக்கண்டு, பின் வடநாடுயாத்திரை சென்றனர். பிறகு சீகாழி அடைந்து தம் 16-வது ஆண்டில் மணம் செய்துகொண்டு நல்லூர்ப் பெருமணத்து ஆலயத்தில் சோதியில் கலந்தனர்.

இப்பெரியாரின் காலத்தை முதன்முதலில்; நிலை நிறுத்தினவர் வித்வான் சுந்தரம் பிள்ளை அவர்கள். பல நூல்களிலிருந்தும் ஆதாரங்கள் எடுத்துக் கூறியும் சங்கரர் தம் சௌந்திரியலகரியில் "திராவிட சிசு" என்று அன்னாரைக் கூறியிருப்பதையும் ஆதாரமாகக் கொண்டு முன் சில பெரியோர்கள் கொண்டிருந்த பல அபிப்பிராயங்களையும் கண்டித்து எழுதினார்கள். பிறகு அவ்வியாசத்திற்கு அநுபந்தமாக இரண்டு காரணங்களைக் குறிப்பிட்டிருக்கின்றனர். காஞ்சியில் கைலாச நாதர் ஆலயம் என்ற திருக்கற்றளி கி. பி. 550-ல் இராஜசிம்ஹனால் கட்டப்பட, அதைச் சம்பந்தர் காலத்திருந்த அப்பர் பாடியிருப்பதினால் அதற்குச் சமீப காலத்தில் சம்பந்தர் இருந்திருக்க வேண்டும் என்பது ஒன்று; சளுக்கிய புலிகேசியினுடைய தலை நகர் வாதாபியைப் பல்லவன் படைத்தலைவராக இருந்த சிறுத்தொண்டர் துகளாக்கியதை முன்னிட்டு, அக்காலத்திற்குப்பிறகு அன்னாரைச் சந்தித்த சம்பந்தர் அதற்கு அடுத்த சில ஆண்டுகளுக்

குள் இருந்திருக்கவேண்டும் என்பது இரண்டாவது. சமீப காலத்து ஆராய்ச்சிகளால் இவ்விரண்டும் உண்மை எனத் தெரிகின்றன.

சிறுத்தொண்ட நாயனருடைய இயற்பெயர் பரஞ்சோதியார் என்பது. அவர் காஞ்சியில் பல்லவ அரசன் நரசிம்மவர்மனிடத்துச் சேனுதிபதியாயிருந்தனர். பல்லவர்களுக்கும் குந்தள நாட்டுச் சாளுக்கியர்களுக்கும் போர் நடந்து வந்தது. அக்காலத்துச் சளுக்கியன் புலிகேசி II என்பவன். இவன் வெகு பராக்கிரமசாலி. வடநாட்டு ஹர்ஷவர்த்தனனை வென்றவன். அக்காலத்தில் இந்நாட்டிற்கு வந்த யுவான் சங்கு என்ற சீன யாத்திரிகன் 641 கி. பி.-யில் வாதாபி சென்றிருக்கின்ருர். கி. பி. 642-ல் பரஞ்சோதியார், புலிகேசி II யை வென்று வாதாபியைத் தூளாக்கிவிட்டார். இதைச் சேக்கிழார்,

"மன்னவர்க்குத் தண்டுபோய் வடபுலத்து வாதாவித்
தொன்னகரந் துகளாகத் துளைநெடுங்கை வரையுகைத்துப்
பன்மணியும் நிதிக்குவையும் பட்டினமும் பரித்தொகையும்
இன்னனவெண் ணிலகவர்ந்தே இகலரசன் முன்கொணர்ந்தார்"

எனக் கூறியுள்ளார்.

பிறகு பரஞ்சோதியாரின் பக்தியைக் கண்டு பல்லவன் அவருக்குத் திரண்ட நிதி கொடுத்தனுப்ப அவரும் திருச்செங்காட்டங் குடியில் திருத்தொண்டு பூண்டு வந்தனர். அக்காலத்தில்தான் அவரைச் சம்பந்தர் கண்டு உபசரிக்கப்பெற்றது. இதைச் சிறுத்தொண்டர் புராணத்தில் விரிவாகக் காணலாம். இச் சந்திப்பு கி. பி. 646-7-ல் இருக்கலாம். வாதாபி நகர வீழ்ச்சி அவ்விடத்துச் சாசனங்களால் நிச்சயமாகத் தெரிகிறது. ஆகவே சம்பந்தர் காலம் 639-முதல் 655 வரைக்குள் என ஊகிக்கலாம்.

திருஞான சம்பந்தர் வாழ்ந்த காலம் பல்லவ மன்னர்கள் உன்னத நிலையிலிருந்த காலமாகும். பிறகு ஒன்றிரண்டு நூற்றுண்டுகளில் அவ்வம்சம் நிலை குலைந்தது. அதன்பின் சோழவம்சம் தழைத்தது. சோழவம்சத்தினர் சைவசமய பரிபாலகர்கள்.

அவ்வம்சத்தினர் வெகு உன்னத நிலைமை யடைந்து தமிழர் நாகரீகத்தை வெகு தூரம் பரப்பினார்கள். இந்தியா மட்டுமே யன்றி, இலங்கை, பர்மா, சுமத்ரா முதலான தீவுகளுக்கும் சென்று தம் வெற்றியை ஊன்றினார்கள். சைவ சமயத்தைப் பெரிதும் தழுவிப் பல பெரும் கோயில்களை எழுப்பினார்கள். சைவசமய ஆசாரியர்கள் உலகத்திற்கு உபதேசித்ததைப் பலவாறு விருத்தி செய்தார்கள். அவர்களால்தான் சமயாசாரியார்களின் கீர்த்தியும் அதிகமாகப் பரவலாயிற்று.

மூவர்கள் அருளின தேவாரப் பதிகங்கள் பல சிதிலமாகியும் மறைந்தும் போயின. அக்காலத்தில் திருநாறையூர் நம்பியாண்டார் நம்பி என்ற ஒரு பெரியார் இறக்காமல் நின்ற பதிகங்களையெல்லாம் சேகரித்து ஒன்றுசேர்த்துத் திருமுறைகளாக வகுத்து வெளியிட்டனர். அதுமுதல் பதிகங்கள் இறந்துபடாமல் பாதுகாக்கப்பெற்றன. இது நடந்தது 10-ம் நூற்றாண்டு. ஆகவே அக்காலத்தில் சமயப்பற்று அதிகமாகப் பொதுமக்களிடத்தும் அரச குடும்பத்தாரிடத்தும் வேரூன்றியிருந்ததென்று தெரிகிறது. நம்பியாண்டார் நம்பி இறவாமல் நிலைக்கும்படி தேவாரங்களைச் சேகரித்த அதே காலத்து, சில புலவர்கள் சில பதிகங்களைக் கோயில் கற்களிலும் செதுக்கி வைத்தனர் போலும். ஏனெனில் 10 நூற்றாண்டு எழுத்திலே திருவிடைவாய் ஆலயத்தில் சம்பந்தர் பதிகம் ஒன்று எழுதப்பெற்றிருக்கிறது. அப்பதிகம் இப்போது வழங்கி வரும் திருமுறையில் கிடையாது. ஆகவே அக்காலத்தில் பதிகங்களை மறைந்து போகாதபடி சேமிக்கவேண்டுமென்ற எண்ணம் பொதுமக்களுக்கு இருந்தது என அறியலாம். அத்தேவாரம்முதல் இறுதி பாசுரங்கள் இவை,—

"மறியார்கரத் தெந்தையும் மாதுமையோடும்
பிறியாத பெம்மானுறையு மிடமென்பர்
பொறிவாய் வரிவண்டு தன்பூம் பெடைபுல்கி
வெறியார் மலரிற் றுயிலும் விடைவாயே."
ஆறும் மதியும் பொதி வேணிய னூரா
மாறில்பெருஞ் செல்வமலி விடைவாய்

நாறும் பொழிற் காழியர் ஞானசம்பந்தன்
கூறுந்தமிழ் வல்லோர் குற்றமற் றோரே.''

இவையே சம்பந்தரைப்பற்றிய ஆதிசாசனமாகும்.

சோழ மன்னர்களிலே மிகப் பிரக்கியாதிபெற்றவன் இராஜராஜர் 1 (985-1013.) இவர் சிவபாத சேகரன் என்ற பெயர் பெற்றுச் சைவத்தை மிகவும் பாராட்டினவர். சைவத்திற்குத் தலைமை ஆலயமாகிய சிதம்பரத்தைப்போன்று தன் தலைநகரான தஞ்சையில் தம்பெயரால் இராஜராஜேசுரம் என்று புகழ்பெற்ற ஆலயத்தை நிர்மாணித்தவர். எவரும் பிரமிக்கத்தக்க வேலைப்பாடுள்ள இப்பெரும் ஆலயம் இன்னமும் நல்ல நிலைமையில் இருக்கிறது. இவ்வாலயத்தின் சுற்சுவர்களில் தாம் இயற்றிய சகல காரியங்களையும் பதித்து எழுதிவைத்துள்ளார். அவர் செய்துள்ள சகல சிவ கைங்கரியங்களும் அங்கே எழுதப்பட்டிருக்கின்றன. சிதம்பரத்தில் நடராஜர் சந்நிதியைப் போன்று இவ்வாலயத்தில் ''ஆடவல்லான்'' மூர்த்தியை நிர்மாணித்து அதற்குச் சகல வைபவங்களும் நடத்திவந்தார்.

இராஜராஜச் சோழர் அந்திய காலத்திலும் அவர் மகன் இராஜேந்திர சோழர் ஆரம்ப நாளிலும் இராஜராஜேசுவராலயத்தை மேல்பார்வை பார்த்து வந்தவன் பொய்கை நாட்டுத் தலைவனை ஆதித்த சூரியன் என்ற தென்னவன் மூவேந்த வேளான் என்ற ஒரு பிரபு. இவன் இராஜராஜர் கடைசி ஆண்டு அதாவது 1013-14-ல் திருஞானசம்பந்தடிகள், திருநாவுக்கரையர், நம்பி ஆரூரனர், நங்கை பரவையார் முதலான மூர்த்திகளைக் கோயிலில் பிரதிஷ்டை செய்தான். இச்செய்தி தஞ்சை இராஜராஜேசுரன் ஆலயத்தில் (Vol. 11 No, 38) அடியிற் கண்டபடி செதுக்கப்பட்டிருக்கிறது:—

''ஸ்வஸ்தி ஸ்ரீ உடையார் ஸ்ரீராஜராஜேசுரம் உடையார்க்கு ஸ்ரீ கார்யம் செய்கின்ற பொய்கை நாடு கிழவன் ஆதித்தன் சூர்யனை தென்னவன் மூவேந்த வேளான் ஸ்ரீ ராஜராஜீசுரம் உடையார் கோயிலில் யாண்டு இருபத்

தொன்பதாவது வரை எழுந்தருளுவித்த செப்பு பிரதி மங்கள்.

... ...

பாதாதி கேசாந்தம் இருபத்திரு விரலே இரண்டு தொரை உசரத்து இரண்டு திருக்கை யுடையராகக் கனமாக எழுந்தருளுவித்த திருஞானசம்பந்தடிகள் ப்ரதிமம் ஒன்று. இவர் எழுந்தருளி நின்ற இருவிரலே இரண்டு தொரை உசரத்து பத்மம் ஒன்று; இதனொடும் கூடச்செய்த ஒன்பதிற்று விரலே இரண்டு தொரைச் சமசதுரத்து நால்விரல் உசரத்து பீடம் ஒன்று.

இவனே திருஞானசம்பந்தனடிகளுக்குக் குடுத்தன— உருத்திராட்சச்சரி பொன்னின் நூலிற் கோத்த உருத்திராக்ஷம் ஒன்றுட்பட நிறை அரைக் கழஞ்சே இரண்டு மஞ்சாடிக்கு விலை காசு ஒன்றரை, உருத்திராக்ஷச்சரி பொன்னின் நூலிற்கோத்த உருத்திராக்ஷம் ஒன்றுட்பட நிறை அரைக் கழஞ்சே மஞ்சாடியும் குன்றிற்கு விலை காசு ஒன்றரை, தாழ்வடம் ஒன்றிற் பொன்னின் சரி ஐம்பத்தாறும் உருத்திராக்ஷம் ஐம்பத்தாறும் உட்பட நிறை எண் கழஞ்சே நாலு மஞ்சாடியும் குன்றிற்கு விலை காசு இருபத்தைஞ்சு, திருப்பொற்பூ ஒன்று, பொன் கழஞ்சே குன்றி திருக்கைக்காரை ஒன்று, பொன்கழஞ்சே முக்காலே நாலு மஞ்சாடி, திருப்பட்டிகை ஒன்று, பொன் இருகழஞ்சு.

... ...

இவன் எழுந்தருளுவித்த திருஞானசம்பந்தனடிகளுக்கு இராஜேந்திர சிங்க வளநாட்டு திருவாலி நாட்டு உடையார் ஸ்ரீராஜீசுரமுடையார் தேவதானம் குறுவாணியக்குடி ஆகிய பரகேசரிபுரத்து நகரத்தார் யாண்டு இருபத்தொன்பதாவது வரை குடுத்த ரத்னங்கள் தக்ஷிணமேரு விடங்கன் என்னும்கல்லால் நிறை எடுத்தும் பொன் ஆடவல்லான் என்னும் கல்லால்நிறை எடுத்தும் கல்லில்வெட்டின உருத்ராக்ஷம் பொன்னின் சரிகட்டிற்று ஒன்றும்

நாண்படுகண்ணும் கொக்குவாயும் உட்பட நிறை கழஞ்சே எழுமஞ்சாடிக்கு விலைகாசு மூன்றேகால்”

மேலும் கி. பி. 1014 வருடத்தில் மூவருக்கும் பெரியபெருமாளுக்கும் பல தானங்கள் செய்தவன்—அவ்வாதித்த சூரியன் என்பான். இதற்குக் கல்வெட்டு (Vol II No. 41 S. I. I.)

“உடையர் ஸ்ரீராஜராஜீசுவரம் உடையார்க்கு ஸ்ரீகாரியம் செய்கின்ற பொய்கை நாடு கிழவன் ஆதித்தன் சூர்யனான தென்னவன் மூவேந்த வேளான் தான் எழுந்தருளுவித்த நம்பியாரூரருக்கும், திருஞானசம்பந்தனடிகளுக்கும், திருநாவுக்கரைய தேவர்க்கும் உடையார் ஸ்ரீராஜேந்திர சோழதேவர்க்கும் யாண்டு மூன்றுவது வரை குடுத்த தரா நிலை விளக்கு ஒன்று இரும்பு நாராசம் உட்பட நாற்பத்தொரு பலவரை......”

மேலும் இராஜராஜேசுவரர் ஆலயத்தில் திருப்பதிகம் (பதியம்) வாசிப்பதற்கு 48 பேருக்கு ஏற்பாடுகள் செய்தது (Vol. II No. 65) கல் வெட்டில் காண்கிறோம். ஆகவே அக்காலத்தில் திருமுறைகள் சேகரிக்கப்பட்டுக் கோயில்களில் அவைகள் வழங்கப்பெற்று வந்தன என்பதை அறிகிறோம். மூவருடைய பெருமை அதிகமாகப் பரவியிருந்தது என்பதை இது நிருபிக்கிறது. அது;

“இராஜகேசரிவர்மரான இராஜராஜ தேவர்க்கு யாண்டு இருபத்தொன்பதாவது வரை உடையார் ஸ்ரீ ராஜராஜேசுரர் உடையார்க்கு திருப்பதியம் விண்ணப்பம் செய்ய உடையார் ஸ்ரீ ராஜராஜதேவர் குடுத்த பிடாரர்கள் நாற்பத்தெண்மரும் இவர்களிலே நிலையாக உடுக்கை வாசிப்பான் ஒருவனும்...”

... ...

என அச்சாசனம் கூறுகிறது. இவையெல்லாம் 10-ம் நூற்றாண்டின் இறுதியில் இருந்த இராசராசச் சோழர் காலத்தில் நடந்தவை.

அவர் மகனார் கங்கை கொண்ட சோழர் எனற இராஜேந்திரச் சோழர் ஆவர். இவரும் வெகு கியாதிபெற்றுப் பல தேசங்களையும் பிடித்து ஆண்டவர். இவரும் சிவபக்தியில் சிறந்து தாம் கட்டின தலைநகரான கங்கை கொண்ட சோழ புரத்திலே ஒரு பெரும் சைவாலயம் கட்டி, அதில் சைவ அபிவிருத்திக்கு வேண்டிய சற்காரியங்களைச் செய்தார். (தாடரும்)

மணிவாசகரும் கண்ணப்பரும்

(௪கஅ-ம் பக்கத் தொடர்ச்சி)

[தமிழ்ப்புலவர் அ. மு. சரவண முதலியாரவர்கள் எழுதியது]

இங்ஙனம் ஒரு வரலாறு, தன்னைக் கூறுவார்க்குத் தலைவன் தாளின்கண் தாழா அன்பை விளக்குந் தன்மையதானால் அவ்வரலாறுடையார் (கண்ணப்பர்) ஆண்டவன் அடியின் கண் வைத்த அயரா அன்புடையாரென்பதில் ஐயம யாதுளது? இதனாலன்றோ கருத்துப் பொருளன்றிக் காட்சிப் பொருளாகாத அன்பிற்கு ஒரு வடிவு கூற வேண்டுமானால் அது கண்ணப்பர் திருவுருவந்தான் எனத் தெய்வப் புலமைச் சேக்கிழார் பெருந்தகையார், திருஞான சம்பந்தர் திருக்காளத்தித் தேவ தேவனைக் காணும் பேரவா உந்த அம்மலை மீதேறி இறைவனை இறைஞ்சி, அப்பயனை உடனே நேரிற் கண்டாங்கு, கண்ணப்பரைக் கண்டு வணங்கினாரென்பதை,

இறைவர் திருமுன்பெய்தித் தொழுது தலை மேற் கொண்டு செங்கை போற்றி, வீழ்ந் தெழுவார் கும்பிட்ட பயன் காண்பார் போல் மெய் வேடர் பெருமானைக் கண்டு வீழ்ந்தார்.

எனக் கூறியருளி, அவ்விருவரையும் அவர் கண்ட காட்சியை,

"உள்ளத்திற் றெளிகின்ற வன்பின்மெய்மை
யுருவினையும் அவ்வன்பினுள்ளே மன்னும்

வெள்ளைச்செஞ்சடைக்கற்றை நெற்றிச் செங்கண்
விமலரையும் உடன்கண்ட விருப்பம் பொங்கிப்
பள்ளத்தி னிழிபுனல்போற்பரந்து செல்லப்
பைம்பொன் மலைவல்லி பரிந்தளித்த செம்பொன்
வள்ளத்தின் ஞானவா ரமுதமுண்டார்
மகிழ்ந்தெழுந்து பலமுறையும் வணங்குகின்றார்."

என்னுஞ் செம்மை சான்ற மொழிகளால் தெருட்டியருளி னர். இன்னும் நம்பியாரூரர் அம்மலையை நண்ணுவதை,

'தடுக்கலாகாப் பெருங்காதற்லைநின்றருளுங் கண்ணப்பர்
இடுக்கண்களைந் தாட்கொண்டருளு மிறைவர் மகிழ்ந்த காளத்தி
அடுக்கல் சேரவணைந்து பணிந்து———'

என்னும் பொன் மொழிகளாற் புகன்றருளுகின்றனர். இவ்வாற்றான் கண்ணப்பர் அன்பின் முடிந்த முடிபுக்கு ஓர் எடுத்துக் காட்டாக விளங்குகிறாரென்பது ஒரு தலை.

இப்பெரியார் அன்பினைப் பாராட்டுவான் நாம் இங்கு ஆராய்ச்சிக்கு எடுத்துக் கொண்ட 'கண்ணப்பனொப்பதோர்' என்னுந் திருவாசகத்தையே தலைப்பெய்து

'கண்ணப்ப னொப்பதோ ரன்பின்மை யென்றமையாற்
கண்ணப்ப னொப்பதோ ரன்பதனைக் = கண்ணப்பர்
தாமறிதல் காளத்தி யாரறித லல்லதுமற்
றாரறியு மன்பன் றது'

என்று கூறுந் 'திருக்களிற்றுப்படியாரும்' இங்குக் கருதத் தக்கதாகும். எனவே அன்பின் ஊற்றுக்கு நிலைக்களனாக விளங் கிய வாதவூரடிகள் தமக்கு இறைவனிடத்து அன்பில்லை யென் றும், கண்ணப்பர் தாம் அன்பிற் றலைசிறந்தவரென்றுங் கருதிய தன் காரண மென்னவென்பதைச் சிறிது ஆராய்வோம்.

சாத்த னென்பானொருவன் தனது வாழ்க்கையில் நேர்ந்த தொன்றைப் பேரின்ப மெனக் கருதுகின்றான்; அதுவே பிறி தொரு கொற்றன் வாழ்க்கையில் அமைந்து கிடக்குமேல் அவனை அடிக்கடி நினைப்பானென்பதும், அவன் ஒரு செல்வன் முன்

‘எனக்கு இவை யிவை வேண்டும்’ எனக் குறையிரக்கின்றான்,’ அவை அவை அக் கொற்றனிடம் அமைந்து கிடக்குமேல் அவனை அடிக்கடி நினைவதுடன் ‘அவன் அவற்றைப் பெறுதற்கு முற்றுந் தகுதி வாய்ந்தவன்; யான் அத்தகுதி சிறிதுமில்லாதவன்;’ எனச் சிந்திப்பானென்பதும், இன்னும் அவன் அச் செல்வனிடத்துத் தாம் வேண்டும் பொருள்களைக் கொற்றன் அச்செல்வனுக்கே அளிக்க வல்லனாயின் அவனை எண்ணி எண்ணி இன்புறுவானென்பதும் உலகிற் கண்கூடாகக் காண்பதை நாம் நினைவில் வைத்துக் கொள்வோமாக.

அடிகள் குதிரை வாங்கும் பொருட்டுத் திருப்பெருந்துறை எல்லையை அணுகிய வுடனே பல இன்பங்கள் தம்மகத்தே நிகழ்கின்றன. ஒரு பெருஞ் சுமை அவர் முடியின் மீதிருந்து கீழே இறங்கியது போலும் அவர் கண்டார். இதனை,

“பித்திதுவெனப் பிறர் நகைக்கவரு நாலாஞ்
சத்திபதியத் தமது சத்தறிவுதன்னைப்
பொத்தியமலத் தினும்வெரீ இச்சுமை பொறுத்தோன்
ஒத்திழிபிணிப்புறு மொருத்தனையு மொத்தார்.”

என்னுந் திருவிளையாடற் புராணத்தால் அறிகின்றோம்.
இனி, கானவர் தலைவன் காளத்தி மலையைக் காண்டலும்,

“ஆவதென்னிதனைக் கண்டிங்கணைதொறு மென்மேற் பாரம்
போவதொன்றுளது போலும்,”

என எண்ணி வியப்புறுகின்றா ரென்பதைத் திருத்தொண்டர் புராணத்தால் தெரிகின்றோம். எனவே தமது வாழ்க்கையில் நேர்ந்த அதனைப் பெரிய இன்பமெனக் கருதிய அடிகள் அது போன்ற இன்பத்தை முன்னரே நுகர்ந்த கண்ணப்பரைக் கவின்பெறக் கழறல் இயல்பன்றோ?

மணிவாசகனார் தமது திருவாசகத்தின்கண் “சித்தஞ் சிவமாக்கிச் செய்தனவே தவமாக்கும், அத்தன்” எனவும், “காணுங் கரணங்களெல்லாம் பேரின்ப மெனப், பேணு மடியார்” எனவும் கூறுமாற்றால், சீவ கரணங்களனைத்தும் சிவகரணங்களாக

நிகழப் பெற்றவர் செய்யும் எவ்வகை வினையும் தவவினையே யாகுமெனவும், அத்தகைப் பேறு தமக்கு அருள வேண்டி ஆண்டவனை வேண்டினு ரெனவும் புலனுகும். இங்ஙனம் வேண்டி அதனைப் பெற்றமை,

"சித்தமல மறுவித்துச் சிவமாக்கியெனையாண்ட"
"சிந்தைதனைத் தெளிவித்துச்சிவமாக்கி யெனையாண்ட"

என்பன முதலியவற்ரு லுணர்க.

இனி, கண்ணப்பர் இந் நிலையை (சிவகரணமாதல்) அடைந் தவ ரென்பதை,

"திங்கள்சேர் சடையார் தம்மைச் சென்றவர்காணுமுன்னே
அங்கணர் கருணைகூர்ந்த அருட்டிரு நோக்கமெய்தித்
தங்கியபவத்தின் முன்னைச் சார்புவிட்டகல நீங்கிப்
பொங்கிய வொளியினீழற் பொருவிலன்புருவமானார்"
(கண்ணப்பர் புராணம்)

என வருஞ் செய்யுளா லறிக. அவர் செய்தன அனைத்துந் தவமே யாயின வென்பதை,

"அவனுடைய வடிவெல்லா நம்பக்க லன்பென்றும்
அவனுடைய வறிவெல்லா நமையறியு மறிவென்றும்
அவனுடைய செயலெல்லா நமக்கினிய வாமென்றும்
அவனுடைய நிலையிவ்வா றறிநீயென்றருள் செய்வார்" (ஷை.
"அவன்மன நமக்குக் கோயிலவனுரை பலவுமோத்தாம்
அவன் முயல் தொழில்களெல்லாம் அறத்தொழிலையமில்லை"
(சீகாளத்தி புராணம்)

எனச் சிவபெருமான் சிவகோசரியார் கனவின்கண் தோன் றிக் கூறியருளியவாற்ரு லறிக.

இன்னும் நமது அடிகள் இறைவனை நோக்கித் தம் விருப் பத்தைக் கூறுமுகத்தால், 'பெருமானே! நின் திருவடியை என் இரண்டு கைகளாலும் இறுகப் பிடித்து என் முடிமீதிருத்தித்

தொழவும், உன் திருப்பெயர்களை என் வாயார வாழ்த்தவும், உன்னை நினைந்து நினைந்து என் மனம் அழலிற் பட்ட மெழுகு போல் உருகவும் விரும்புகின்றேன்.' என வேண்டி நிற்கின்றார்; இதனை,

."கையாற் றொழுதுன் கழற்சேவடிகள் கழுமத்தழுவிக் கொண்டு
எய்யாதென்றன் றலைமேல் வைத்தெம் பெருமானென்றென்று
ஐயாவென்றன் வாயாலரற்றியழல் சேர்மெழு கொப்ப
ஐயாற்றரசே ஆசைப்பட்டேன் கண்டாயம்மானே"

(திருவாசகம் ; ஆசைப்பத்து)

என்னும் செய்யுளாற் காண்க.

(மன மொழி மெய் மூன்றானும் வழிபட வேண்டும் என்று விரும்பியபடி)

இனி, கண்ணப்பர் காளத்தி மலையிலேறிக் குடுமித் தேவரைக் கண்ட அளவில், பன்னாள்வரையுங் காணாது போய் ஒரு நாள் எதிர்ப்பட்ட சேய் ஒன்றை அதன் தாயானவள் எங்ஙனம் விரைந்து ஓடி இறுகத்தழுவி முத்தமிட்டு உள்ளம் உருகா நிற்க, கண்களில் நீர் பெருக நின்று 'என் கண்ணே' இது வரையும் நீ எங்குச் சென்றிருந்தனை' என அன்புகனிய அகங் கரைய வினவுவாளோ அங்ஙனமே தமது தோள்கள் அழுந்துமாறு அப்பெருமானைக் கட்டித் தழுவி, அழலிற்பட்ட மெழுகு போல உள்ளம் உருகா நிற்க, முத்தமிட்டுத் தமது தூயவாய் திறந்து கண்களில் நீரரும்பச் சில கூறுகின்றார்; இதனை,

"நாள்பலபிரிந்திருந்து நண்ணிய சிறுசதங்கைத்
தாளிள மகனைக்கண்ட தாயெனத் தாழாதோடி
நீளொழுவனையதோள்கள் நெருழுங்குறத் தழுவிமோந்து
வாளழலரக்கினன்ன மனத்தினன் முத்தங் கொண்டான்.'

(சீகாளத்தி புராணம்)

"செய்ய கண்ணீரரும்பச் செறிமயிர் பொடிப்ப ஆதன்
கையகப்பட்ட தெய்வக் கதிர்விடு மணியினையேற்கு
ஐயன் வந்தகப்பட்டானென் றணியெயிறிலங்கநக்கு
மெய்யெலா மெய்யன்பாயவிடலை மற்றின்ன சொல்வான்." (ஷை)

என்பவற்றால் அறிக. எனவே அடிகள் விரும்பியவை எவ்வெவையோ அவையனைத்தும் நாயனார் நிகழ்ச்சியில் அமைந்து கிடத்தல் காண்க.

இனி, மணிவாசகனார் 'உற்றார் முதலிய யாரும் எவையும் எனக்கு வேண்டாம்; நின் திருவடியை நினைந்து நினைந்து, ஈன்றணிமைத்தாய பசு ஒன்று எங்ஙனம் தன் கன்றை நினைந்து நினைந்துருகுமோ, அங்ஙனமே யான் உருக வேண்டுகிறேன்' என்பதை,

"உற்றாரையான் வேண்டே னூர்வேண்டேன் பேர்வேண்டேன்
கற்றாரையான்வேண்டேன் கற்பனவுமினியமையும்
குற்றாலத் தமர்ந்துறையுங் கூத்தாவுன் குரைகழற்கே
கற்றாவின் மனம்போலக் கசிந்துருக வேண்டுவனே."

என்னுந் திருவாசகத்தாற் காண்க.

இனி, நமது திண்ணனாரோ, குடுமித் தேவரைக் கண்டது முதல் அருந்தவங் கிடந்து பெற்ற தமது இருமுதுகுரவரையும், மற்றும் உற்றாரையும், மற்றவற்றையும் வேண்டாராகி அக்குடுமித் தேவனுக்கு உணவு கொண்டு வரும் பொருட்டுப் போகத் துணிந்தவர் பிரிந்து செல்ல மனம் ஒருப்படாமல்,

"போதுவர் மீண்டு செல்வர் புல்லுவர் மீளப்போவர்
காதலினோக்கி நிற்பர் கன்றகல்புனிற்றுப் போல்வர்"

ஆனார். எனவே இங்கும் மணி அண்ணலார். வேண்டியது திண்ணனாரிடம் அமைந்து கிடந்தமை கண்டு களிப்புறுக.

இன்னும் நமது வாதவூர் வள்ளல்,

"இறைவன் திருவடியை இடையறாது நினைந்துருகப் பெற்று, கண்டவரெல்லாம் 'இவன் மால் கொண்டவன்' என்று சொல்லுமாறு யான் ஆவது என்ஞான்றோ ?" எனக் கவல்வார்,

உத்தமனத்தனுடையானடியே நினைந்துருகி
மத்தமனத்தொடு மாலிவனென்ன மனநினைவில்
ஒத்தன வொத்தன சொல்லிட வூரூர் திரிந்தெவரும்
"தத்தமனத்தன பேசவெஞ்ஞான்று கொல்சாவதுவே"

எனறு கூறியருளினர். இனி, வேடர் பெருமானே, ஆண்ட வன் அருட்கழலை அணுத் துணையும் மறவாது உன்னி யுன்னி உருகியதுடன்,

"என் செய்தாய் திண்ணு நீதானென்னமால் கொண்டாய்"

எனவும்,

"தேவுமால் கொண்டானிந்தத் திண்ணன்" எனவும் முறையே நாணனும், நாணன், காடன் என்னும் இருவராலும் கூறபபட்டனர் எனத் திருத்தொண்டர் புராணத்துத் தெய்வப் புலமைச் சேக்கிழார் பெருந்தகை தெரித்த வாற்றல் தெரிகிறோம். எனவே ஈண்டுள்ள ஒற்றுமையும் ஓர்ந்துளமகிழ்க.

(தொடரும்)

குறிப்பு:—சென்ற இதழில் 51-ம் பக்கத்து 9-வது வரியில் 'திருத்தொண்டத் தொகையில் வரும்' என்ற இடத்திலுள்ள முற்றுப் புள்ளியை நீக்கி, அதனை அடுத்த வரியுடன் இணைத்துப் படிக்கக் கடவர்.'

பண்டைத் தமிழ்ச் சொற்கள்

உண்மை, வாய்மை, மெய்மை (கூ)

[திரு. M. V. நெல்லையப்ப பிள்ளையவர்கள் B. A.]

1. உண்மை என்னும் சொல்லானது கடவுளைக் குறிக் கும் பண்டைத் தமிழ்ச் சொற்களில் ஒன்று. உண்மை என்னும் சொல்லைபபோல வாய்மை மெய்மை என்னும் சொற்களும் அதே பொருளை உடையனவாய்க் கடவுளைக் குறிக்கும் பெயர் களாம். அவைகள் இக்கட்டுரையில கருதப்படும்.

2. உண்மை என்னும்சொல் உள் என்ற பகுதியாலும் மை என்ற பண்புப் பெயர் விகுதியாலும் ஆக்கப்பட்டது. உள் என்பது மையுடன் சேர்ந்து மெலி மேவின், னணவும் என்ற நன்னூற் சூத்திர விதியால், ளகர வொற்று ணகர வொற்றாக மாறி உண்மை என ஆயது.

3. உண்மை என்னும் சொல்லிற்கு உள்ளேயிருக்கிற தன்மை (what is within) என்பது வேர்ப்பொருள் (root-meaning) ஆகும். அஃது உள்ளதாயிருக்குந் தன்மை (what is real) என்றும் பொருள்படும். உள் என்ற தமிழ்ச் சொல்லானது ஒருவனுடைய மனதை (mind)க் குறிக்கிறது. உள் என்ற சொல்லுடன் அம் சேர்த்து உள்ளம் என்று கூறுதலுமுண்டு. அதனால் உள்ளத்தில் விளங்குவது உண்மை (Truth) யாகின்றது. உள்ளதாய் விளங்குவதும் (that which is real) உண்மையாகும். உள் அல்லது உள்ளம் என்ற சொல் ஆன்மாவுக்கு (உயிருக்குப்)ப் பெயராய்ச் சிவஞான போதம் முதலிய தமிழ்ச் சமய நூலில் வழங்கப்படுகின்றது. ஆகவே உண்மை (Truth) என்பது ஆன்மாவில் அல்லது ஆன்மாவினது உட் கருவியாகிய உள்ளத்தில் விளங்குகிறது என்று தமிழ் முன்னோர்கள் அறிந்து, அதற்கு அவர்கள் உண்மை என்ற பெயரை இட்டு வழங்கி வந்தார்களென நாம் அறிகிறோம்.

4. உண்மையானது (truth) ஒருவனுடைய ஆன்மாவின், அல்லது ஆன்மாவினுடைய உட்கருவியாகிய (அந்தக் கரணம்) உள்ளத்தில் விளங்கும். எனவே அது வெளியே விளங்குவது அல்ல என்பது தானே போதரும். நூல்களிலே ஓதப்படும் சொற்கள் அல்லது பிறரொருவர் சொல்லும் சொற்கள் ஒருவனுடைய உள்ளத்தில் ஆழ்ந்து மறைந்து கிடக்கும் உண்மையை மேலே எழுப்பி வெளிப்படுத்துதற்குக் கருவிகளாயிருக்குமே அல்லாமல், அச் சொற்களே அவனுடைய உள்ளத்தில் விளங்கும் உண்மை ஆக மாட்டா. அவன் தான் நூலில் ஓதி அல்லது பிறரிடம் கேட்டு அறிந்த சொற்களை உள்ளத்தில் உய்த்து நினைந்து அறிந்து உணர்ந்து கொள்ளுதலினாலேயே அச் சொற்கள் அவனுடைய உள்ளத்தில் உண்மையாக விளங்குவனவாகும். எம்மட்டில் அவன் அச் சொற்களைத் தனது உள்ளத்தில் அறிந்து உணர்வானோ அம்மட்டில் அச்சொற்கள் உண்மையாக விளங்குகின்றன. இந்தக் கருத்தைக் குமரகுருபரசுவாமிகள் தாம் இயற்றிய நீதி நெறி விளக்கத்தில் "எத்துணையவாயினுங் கல்வியிட மறிந்து உய்த்துணர்வில்லெனி னில்லாகும்" என்று

கூறி அருளினர். உய்த்துணர்வு இல்லாமல் எத்துணை நூல்களைக் கற்றாலும் பயனுடையதாகாது என்பது தமிழ் முன்னோர்களுடையகொள்கை.கல்வி என்ற தமிழ்ச்சொல்லின் வேர்ப்பொருளினாலும் உண்மையானது (Truth) ஒருவனுடைய உள்ளத்தில் ஆழ்ந்து கிடப்பதனால் அதனை உள் நோக்கித் தோண்டி வெளிப்படுத்தல் வேண்டும் என்னும் கருத்து பெறப்படுகின்றது.

5. இனி ஆன்மாவிலும், ஆன்மாவினது உள்ளத்திலும் விளங்குவது கடவுளுடைய அருட்சத்தியாகும் (Divine Force). ஆதலின், ஆன்மாவிலும், உள்ளத்திலும் உண்மையை விளங்கும்படி செய்தற்குக் காரணமாயுள்ளது இந்த அருட்சத்தியேயாம். எவ்வளவுக்கு எவ்வளவு ஆன்மாவும் உள்ளமும், காமம் குரோதம் உலோபம் மோகம் மதம் மாற்சரியம் என்னும் அறுவகைக் குற்றங்களினின்று நீங்கித் தூய்மையுடையன வாகுமோ அவ்வளவுக்கு அவ்வளவு ஆன்மாவிலும் உள்ளத்திலும் உண்மையானது தெளிவாய் விளங்கித் தோன்றும். அப்பொழுது முன் ஆராய்ச்சியினால் வந்த உய்த்துணர்வு இப்பொழுது தெளிவு அறிவாக (Intuition) மாறும். இக்கருத்தைத் திருஞானசம்பந்த சுவாமிகள் "அகனமர்ந்தவன்பினரா யறுபகை செற்றைம்புலனு மடக்கி ஞானப் புகலுடையோர் தம்முள்ளப் புண்டரிகத்துள்ளிருக்கும் புராணர்" என்று கடவுளைக் கூறி, அருளினர். இதனால் ஆன்மாவிலும் உள்ளத்திலும் விளங்கும் உண்மைக்குக் கடவுளே பற்றுக்கோடாயுள்ளான் என்பதும் (God is the source of truth) அவ்வாறு தூய்மையுடையாரது உள்ளத்தில் விளங்கும் பொருள் உள்ள பொருளாயுமிருப்பதால் கடவுளே உள்ள பொருள் என்பதும் (God is the truth) பெறப்படுகின்றன. இக்கருத்தைப் பண்டைத் தமிழ்மக்கள் அறிந்து கடவுளுக்கு உண்மை என்று பெயரிட்டனர். உள்ளதாயிருக்கிற பொருளுக்கு அவர்கள் உண்மை என்று பெயரிட்டது அவர்களுடைய அறிவு நுட்பத்தைக் காட்டுகின்றது. கடவுளை உள்ள பொருள் என்று திருஞானசம்பந்த சுவாமிகள்,

"உள்ளதன்றனைக் காண்பன்கீ ழென்றமாமணி வண்ணனும்,
உள்ளதன்றனைக் காண்பன்மே லென்றமாமல ரண்ணலும்

உள்ளதன்றனைக் கண்டிலா ரொளியார் தஞ்சடை முடியின்மேல்
உள்ளதன்றனைக் கண்டிலா வொளியார் விளநகர்மேயதே."

என்ற திருவிளநகர்த் தேவாரப் பாட்டிற் கூறியருளினர். இப் பாட்டில் உள்ளதன் என்ற சொற்றொடர்கள் நான்கும் **உள்ள பொருளாயிருக்கிற** கடவுளைக் குறிக்கின்றன.

6. இனி உண்மை என்னும் சொல் தூய பெரியாரது உள்ளத்திலே விளங்கும் உண்மைப் பொருளாகிய (உள்ள பொருளாகிய) கடவுளைக் குறித்தல்போல வாய்மை என்னும் சொல் அத்தகைய பெரியார் தமது உள்ளத்திலிருந்து வாயினாலே கூறும் உண்மையைக் (truth) குறிக்கின்றது. வாய்மை என்ற சொல் வாய் என்ற பகுதியும் மை என்ற பண்பு விகுதியும் சேர்ந்து ஆகியது. மக்கள் தங்கள் உள்ளத்தில் விளங்கும் கருத்தைப் பிறர் றிய வெளிப்படுத்தற்கு வாயே வாயிலாக இருக்கின்றது. திருவள்ளுவ நாயனார் தாம் அருளிச் செய்த திருக்குறள் 30-வது அதிகாரத்தில் வாக்கினால் உண்மை கூறும் அறச்செயலை (Truth Speaking) வாய்மை என்று கூறினர். அவர்,

"தூஉய்மை யென்பதவாவின்மை மற்றது
வாஅய்மை வேண்ட வரும்"

என்ற குறளில், வாஅய்மை என்ற சொல்லைக் கடவுளுக்குப் பெயராகக் கூறினர். உரையாசிரியர் பரிமேலழகரும் அச்சொல்லிற்குப் பொருளாக "மெய்மமையுடைய பரத்தை ஆகுபெயரான் மெய்ம்மை என்று கூறினார்" என்று உரைத்தனர்.

7. இனி மெய்மை என்ற சொல்லும் அவ்வாறே மெய்யினாற் (உடம்பினாற்) செய்யப்படும் உண்மைச் செயலைக் குறிக்கின்றது. அஃது உள்ளதான அல்லது உண்மைக்குப் பற்றுக்கோடாயுள்ள கடவுளைக் குறித்தற்குத் தமிழ் நூல்களில் வழங்கப்படுகின்றது. மெய் என்ற சொல் கடவுளைக் குறிக்கும் பெயராய்ச் சிவநெறி நூல்களில் நாம் காணலாம். திருவள்ளுவரும்,

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"

என்ற குறளில், கடவுளை மெய்யாகிய பொருள் எனப் பொருள் படும் மெய்ப்பொருள் எனக் கூறினார்.

8. மேலே கூறியவாற்றால் பண்டைத் தமிழ் மக்கள் உள்ளத்தில் விளங்கும் கருத்துக்கு உண்மையென்றும், அந்தக்கருத்து வாயினாற் கூறப்படும்பொழுது அதற்கு வாய்மை என்றும், அந்தக் கருத்து உடலினது தொழிலாற் செயற்படும்பொழுது அதற்கு மெய்மை எனவும் பெயரிட்டு வழங்கினர் என்பதும், அவ்வாறு உள்ளத்திலும் வாயிலும் உடற் செயலிலும் விளங்கும் உண்மைக்குப் பற்றுக்கோடாயிருக்கும் பொருளாயும் உள்ள பொருளாயுமிருப்பவன் கடவுள் என்று அறிந்து கடவுளுக்கும் அப்பெயர்களை இட்டு வழங்கினர் என்பதும் நாம் அறிகிறோம்.

9. இனி உள்ளத்தில் விளங்கின கருத்து வாயினாலே கூறப்பட்டு உடலினாற் செய்யப்பட்டு ஒன்றுக் கொன்று முரணாது நேர்மைப் பட்டிருக்கும் தன்மைக்குப் பண்டைத் தமிழ் மக்கள் "செம்மை" என்று பெயரிட்டு வழங்கினர். செம்மை என்ற சொல நேராயிருக்கும் தன்மை என்று பொருள்படும். பரிமேலழகர் கூ௬௧-வது குறளின் அடியில் "செம்மை - கருத்துஞ் சொல்லும் செயலுந் தம்முண் மாறாமை" என்று உரை கூறியிருத்தல் காண்க. செம்மை என்ற சொல்லும் அதனோடு பொருள் என்ற சொல் சேர்ந்து ஆகிய செம்பொருள் என்ற சொற்றொடரும் கடவுளைக் குறிக்கும் பெயர்களாகத் தமிழ் நூல்களில் பல இடங்களில் வழங்கப்பட்டிருக்கின்றன. ஒன்று இரண்டு காட்டுகிறேன் ; திருவள்ளுவர் " சிறப்பென்னும் **செம் பொருள்** காண்பதறிவு" என்றும் ; திருஞான சம்பந்த சுவாமிகள் **செம்மையாகு** சிவன் என்றும் கடவுளுக்குப் பெயராகக் கூறியிருத்தல் காண்க. விரிபபில் உரை பெருகும்.

10. உண்மை, வாய்மை, மெய்மை, செம்மை என்ற சொற்களின் ஆராய்ச்சியானது பண்டைத் தமிழ் மக்கள் தங்கள் உள்ளம், நா, உடல் என்னும் மூன்று கருவிகளால் முறையே நிகழ்த்தும் நினைப்பும் சொல்லும் செயலும் ஒன்று பட்டு ஒழுகும் செம்மை அறனெறியிற் செல்லும் உயரிய நாகரிக நிலையை

அடைந்திருந்தார்கள் என்ற உண்மையை நமக்குப் புலப்படுத்து கின்றது. தாழ்ந்த நிலையிலுள்ள இக்காலத்துத் தமிழ் மக்கள் தங்கள் முன்னோர்கள் அடைந்திருந்த உயரிய நாகரிகம் அடைய வேண்டுவார்களானால் உள்ளம் நினைப்பிலும் நாஉரையி லும் உடற்செயலிலும் உண்மையைக் கடைபபிடித்து ஒழுகல் வேண்டும். இவ்வாறு ஒழுகுதற்கு உண்மையான கடவுட்பற்று மேலே கூறியபடி இன்றியமையாது வேண்டற் படுவதாகும்.

திருவாசகத்திற்கு உரைஎழுதலாமா?*

(மறைமலையடிகள் எழுதியது)

திருவாசகம் வடமொழியில் உள்ள வேதமேபோல மந்திர மொழிகளால் ஆக்கப்பட்டிருத்தலின் அதனைப் பொருள் தெரி யாமல் ஓதினும் அது வீடுபேற்றின்பத்தினைத் தரும் அத்தகைய நூலுக்கு உரை எழுதுதல் குற்றமாம்; இதுபற்றியே பண்டை நாளிலிருந்த உரையாசிரியர் எவரும் இதற்கு உரை எழுதிற்றி லர்; அருணூலாகிய இதன் பொருளாழத்தைக் கண்டறிதல் நம்மனோரால் ஆகாமையின் இதற்கு உரை எழுதத் துணிந்தது எரிவாய் நிரயத்திற் புகுதற்கே ஏதுவாம என்று ஒருவர் ஒரு பத்திரிகையில் எம்மை மிகவும் இகழ்ந்துபேசி எழுதினர்; இவர் கூற்றின் உண்மையை ஆராய்வாம்.

ஒருவர் கூறியபொருளில் தமக்கு உடன்பாடு இல்லையாயின் அதனை மட்டும் இசைந்த காரணங்களைக்கொண்டு விளக்கிப் போதல் நன்று; அதனை விடுத்து அப்பொருள் கூறினவரைப் பலவாறு இகழ்ந்து பேசுதல் அறிவுடைமைக்கு அழகாகுமா? தமிழ் கற்றாரும் சைவசித்தாந்தம் உணர்ந்தாரும் வரவர அருகிப் போகும் இக்காலத்தில், அவை தெரிந்தாராயுள்ள சிற்சிலரையும்

---

* இது திருசங்கர் கம்பெனியாரால் முன் வெளியிடப்பட்ட செந் தமிழ்க் களஞ்சியம் 4-வது பரலின் புறவேட்டினின்றும் எடுக்கப் பெற்றது.

வசைகூறிக் கலாம் விளைத்தல் யாது பயனைப் பெறுதற்கோ! ஆங்கில மொழியையே பயிலுதலால் இவ்வுலகத்திற் பெறும் பயன்களையெல்லாம் மறுத்துத் தமிழை வருந்திக் கற்றதற்குப் பயன் இதுதானே? ஆங்கிலமொழி கற்றவர் தமக்குட் கருத்து வேறுபாடுகள் வந்தக்கால், அவரவர் தாந்தாம் கொண்ட கொள்கைகளை மட்டும் விளக்கிக் காட்டி வழக்கிடுகின்றனரே யல்லாமல், தமிழரைப்போல் இங்ஙனம் ஒருவர்மேலொருவர் வசைகூறி வழக்கிடுதலைக் கண்டிலம். ஆங்கில நன்மக்களிடத்துள்ள உயர்ந்த தன்மைகளையும் உயர்ந்த செய்கைகளையும் பின் பற்றாமல் அவரைப் பழித்துப் பேசிக்கொண்டே அவர் தம் ஊண் உடைகளைமட்டும் விரும்பிக் கைக்கொண்டு உலாவும் நம் தமிழர் சிலர் கண்டது இவ்வளவுதானா? அது நிற்க.

தமிழில் மந்திரங்கள் இல்லை யெனவும், அதனால் ஞானோப தேசத்திற்கும் சிவபெருமானை அருச்சித்தற்கும் தமிழ் பயன் படாதெனவும் முன்னொருகால் தெய்வச் செந்தமிழை அளவு கடந்து பழித்துப் பேசியவர் இப்போது தமிழ் நூலாகிய திரு வாசகத்திற்குப் பரிந்துபேச வந்ததும் அதனை மந்திர மொழி என்றதும் புதுமையாகவே காணப்படுகின்றன; திருவாசகத் தினும் மிக்கதெனவும், ஈசுர வாக்கியமெனவும் இவர் நினைக்கும் வேதங்களுக்குங்கூட யாஸ்காச்சாரியார் சாயணாசாரியார் முதலி யோர் உரைகள் எழுதி யிருக்கையில் திருவாசகத்திற்கு மட்டும் உரை யெழுதலாகாதென்று இவர் கூறுதல் என்னையோ! வேதங் களையும் திருவாசகத்தையும் பொருள் தெரியாமல் ஓதினும் வீடுபேறு கிடைக்கும் என்று கூறும் இவர் அங்ஙனம் பொருள் தெரியாமல் ஓதி வீடுபேற்றை அடைந்தவர் எத்தனை பெயரைக் கண்டனரோ; எல்லாத் துன்பங்கட்குங் காரணமான அறியா மையைத் தொலைத்து ஞானத்தாலன்றோ வீடு பேற்றை அடைய வேண்டுமென்று அறிவு நூல்கள் வற்புறுத்துரைக்கின்றன! இது

“ஞானத்தால் வீடென்றே நான்மறைகள் புராணம்
நல்ல ஆகமஞ்சொல்ல அல்லவா மென்னும்
ஊனத்தார் என்கடவர் அஞ்ஞானத்தால்
உறுவதுதான் பந்தம்”

என்று சிவஞான சித்தியாரினும் கூறப்பட்டமைகாண்க. அறிவு நூல்களின் பொருள்களை ஆராய்ந்து உணர உணர அறியாமை தேய, அறிவு விளங்கும். இவ்வுண்மை கற்றறிவில்லாரும் உணர்வர்; அங்ஙனமாகத் திருவாசகம் முதலான மெய்ந் நூல் களைப் பொருள் தெரியாமல் ஓதல் வேண்டுமெனவும், அதன் பொருளை விளக்குதல் குற்றமா மெனவும் கூறுவார் கூற்றுச் சிறுமகாரும் நகையாடற் பாலதாகவே யிருக்கின்றது! அதுநிற்க.

யாம் திருவாசகத்திற்கு உரை எழுதப்புகுந்த காரணம் இது: யாம் விரிவுரை நிகழ்த்தச்சென்ற பல இடங்களிற் பலர் தேவார திருவாசகங்களைப் பொருள் தெரியாமல் ஓதக்கேட் டேம். அங்ஙனம் ஓதியவர்கள் பாட்டுகளுக்குப் பொருள் அறியாமையினாலும், சொற்றொடர்களைச் சந்திபிரிக்கத் தெரி யாமையினாலும் சொற்களையும் சொற்றொடர்களையும் மிகவும் வழுப்படக் கூறினர். அவர்களை நோக்கி "இங்ஙனம் ஓதுகிறீர் களே, இவற்றிற்குப் பொருள் என்ன?" என்று கேட்டேம். அதற்கு அவர்கள் "தேவார திருவாசகங்களுக்குப் பொருள் சொல்லவுங்கூடாது, கேட்கவுங்கூடாது என்று சொல்லுகிறார் கள். அதனால் நாங்கள் அவற்றைப் பொருள் தெரியாமலே பாராயணம் பண்ணுவது வழக்கம்" என்றார்கள். அதற்கு யாம் "பொருள் தெரியாமையாற் சொற்களையுஞ் சொற்றொடர்களை யுந் தாறுமாறாகப் பிழைபடுத்திச் சொல்வது குற்றமோ, பொருள் தெரிந்து அவற்றைத் திருத்தமாகச் சொல்வது குற் றமோ, என்று வினவினேம். அதற்கு அவர்கள் "பொருள் தெரியாமல் பிசகாகச் சொல்வதுதான் குற்றம்." என்று ஒப் புக்கொண்டு விடை கூறினார்கள். இவ்வாறே யாம் சென்ற இடங்களிலெல்லாம், பொருள் தெரியாமையால் தேவார திரு வாசகச் செழுந் தமிழ்த் தெய்வப் பாடல்களைப் பெரிதும் பிழை பட ஓதுவார் பலரைக் கண்டு வருந்திய வருத்தமே கடைசியாக இதற்கோர் உரை வகுக்க வேண்டுமென்னும் எண்ணத்தை எம் பால் எழுப்பிவிட்டது. அது நிற்க.

இனிப் பேரறிவினரான மாணிக்க வாசகப் பெருமான்

அருளிச் செய்த திருப்பாட்டுக்களின் பொருள் ஆழத்தினைச் சிற்றறிவினராகிய நாம் கண்டுணர்தல் ஏலாதாதலின், இதற்கு நாம் உரை வகுத்தல் ஆகாதெனின்; மாணிக்கவாசகப் பெருமான் இலக்கண இலக்கிய வரம்புக்கும் அறிவுநூல் வரம்புக்கும் அடங்காமல் நூல்செய்தனராயின், அத்தகைய நூற்பொருளைக் கண்டுணர்தல் இயலாததேயாம். மேலும், இலக்கண இலக்கிய அமைதியும் அறிவுநூல் வரம்பும் இகந்து நூல் இயற்றுதல்தான் ஆகுமோ வெனின் அதுவும் ஆகாது; அத்தகைய வரம்புகளுக்கு அகப்படாமற் சொல்லுவன பித்துப்பிடித்துப் பிதற்றுவார் சொற்களே யாகலின், அத்தன்மையவாம் பிதற்றுரைகளே பொருள் அறிதற்கு ஒரு சிறிதும் ஏலாதனவாம். மற்று இலக்கண இலக்கிய அமைதியும் அறிவு நூல் வரம்பும் உடைத்தாய்ச் செந்தமிழ் வளம் நிரம்பிததுளும்பும் திருவாசகச் செழும் பாடல்களுக்குப பொருள் தெளிதல முற்றும் அரிதன்று. அவற்றின் சொற்கள் சொற்றொடர்களுக்குப் பொருள் தெளிதற்குப் பண்டை இலக்கண இலக்கியக் கருவி நூல்களும் சிவஞான போதம் முதலான அறிவு நூல்களும் இருக்கின்றன; இவற்றைக்கொண்டு ஆராய்தற்குரிய தன்மையினைத் திருவருளுதவியாற் பெற்று விளங்கிவரும் நமது அறிவும் இருக்கின்றது. இவை அத்துணையுங்கொண்டு அமைதியாய் ஆராயுங்கால் திருவாசகப பொருள் நமக்கு விளங்காமற் போகாது. எனருறும், பண்டைக் காலத்து வழங்கி இக் காலத்து முழுதும் வழக்கு வீழ்ந்து ஒருவாற்றானும் அறிதற்கு வாயில் இல்லாத சில சொற்கள் சொற்றொடர்கள் குறியீடுகள் சரித்திரக் குறிப்புகள் சிற்சிலவும், மாணிக்க வாசகப் பெருமான் புறப்பொருள் உணர்வுவிட்டு அகத்தே தமதுணர்வினை மடக்கிச் சிவபெருமான் றிருவருளில் இரண்டறக் கலந்துநின்று நுகர்ந்து கூறியவாகலின் நம்மனோர்க்கு இந்நிலையிற் சிறிதும் விளங்காத பேரின்ப வான்பொருள்கள் சிற்சிலவும் திருவாசகத் திருமறையின்கண் ஆங்காங்கு உளவென்பது எவர்க்கும் உடன்பாடேயாம். அவை ஒழிய, மற்று எஞ்சி நின்றவைகள் நம்மனோர்க்குப் புலனாவனவேயாம். ஒருவாற்றானும் நம்மனோர்க்

குப் புலனாகாத ஒரு நூலை இயற்றினார் என்றால் அறிவும் இரக்க மும் அன்பும் நிறைந்த மாணிக்கவாசகப் பெருமானது அருட் பெருந்தகைமைக்குப் பொருந்தாமையின் அங்ஙனங் கூறுதல் பெரியதோர் ஏதமாம் என்க.

அங்ஙனமாயினும், திருவாசகத்தின்கட் பொருள் உணரப் படாதனவும் சிற்சில ஆங்காங்குளவென்று உடன்படுதலின், ஒருநூற்பொருள் முழுதும் உணரப்படுதல் இயலாதிருக்கையில் அந்நூலுக்கு உரை யெழுதப் புகுதல் குற்றமன்றோவெனின்; அற்றன்று. முழுதும் உணரக்கூடாமைபற்றி ஒருநூற்பொருளை ஆராய்ந்து பயன்பெறாதுவிட்டு மடிந்திருத்தலே குற்றமாவ தன்றி, நம்மால் இயன்றமட்டும் முயன்று அதனை யறிதல் குற்ற மாகாது. திருவாசகம் என்னும் இம் மெய்ந்நூற்பொருளை அறியும் முயற்சியில் இடையிடையே நம்மை யறியாது பிழை படுவோமாயினும் அதுகண்டு எல்லா இரக்கமும் உடைய நம் ஐயன் நமக்கு இரங்கி அருள்புரிவானே யல்லாமல் நம்மேல் வெகுள்வான் அல்லன். அப்போதுதான் நடை கற்கும் சிறு மகார் தம் தந்தையைக் கண்டு அவன்பாற் செல்லுதற்கு விழை ந்து தெற்றித் தெற்றி நடந்து வருதலைப் பார்த்து அவர் தந்தை மகிழ்வனேயன்றி அவர் மேற் சினவான். மக்களுள்ளும் தந்தையாவான் இத்துணையன்பும் இரக்கமும் உடையனாயின், எல்லாவுலகிற்கும் தந்தையாய் எல்லா அருளும் இரக்கமும் உடைய இறைவன் தன்னை யணுகி வழிபடும் பொருட்டு நம் போல்வார் செய்யும் முயற்சிகளின் இடையிடையே நாம் பிழை படுதல் கண்டு நமக்கு இரங்கி அருளாது நம்மை எரிவாய் நிர யத்தில் இடுவன் என்றால் எவ்வளவு பேதைமை! திருவாசகத்தை ஓதலும் அதன் பொருளை உணர்தலும் அதற்கு உரை எழுத லும் எதற்காக? அறிவும் அன்பும் பெற்றுப் பிறவாற்றால் உண ரப்படாத முதல்வனை உணர்ந்து பிறவாற்றாற் கரையாத நெஞ் சத்தைக் கரைத்து அவனை வழிபட்டு உய்தற்கன்றோ? திரு வாசகத்தின் சொல்லிலும் பொருளிலும் எந்நேரமும் கருத்து ஈடுபட்டு நின்று உரை எழுதுதற்குப் பயன் எரிவாய் நிரயங் கிடைப்பதென்றால், திருவாசகத்தைப் பொருடெரியாமற் பிழை

பட ஓதி எஞ்ஞான்றும் செருக்கினும் அறியாமையினும் உழல்வோர்க்கு ஏது கிடைக்குமோ அறிகிலம்! "நரகம் புகினும் எள்ளேன் திருவருளாலே யிருக்கப்பெறின் இறைவா" என்று அடிகள் அருளியாங்கே, திருவாசகத்திற்கு உரை எழுதுதலால் நரகம்புகுவதாயின் அதுவும் திருவருளுக்கு இசைவானால் எமக்கும் அஃது இசைவேயாம். ஆனால், அருளே உருவாகவுடைய எம் இறைவனை சிவபெருமான் எமது இச்சிறு முயற்சியைக் கண்டு உவந்து எமக்கு அருள் வழங்குவன் என்னும் உறுதி உடையோமாதலால் பிறர் யாதுகூறினுங் கூறுக.

இளங்கோவடிகளும் பொருளிலக்கணமும்

[பண்டித ந. மு. வேங்கடசாமி நாட்டாரவர்கள்]

குமரியொடு வடவிமயத் தொருமொழிவைத் துலகாண்ட இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் என்னும் சேரர் பெருமான் மக்களுள் இளவலும் வேந்து முனியுமாகிய இளங்கோவடிகள் முத்தமிழ்ப் புலமையும் நிரம்பிய வித்தகக் கவியரசர் என்பது அவரியற்றிய பழுதற்ற முத்தமிழ்க் காப்பியமாகிய சிலப்பதிகாரத்தால் நன்கு துணியப்படுவதாகும். இத் தொடர் நிலைச் செய்யுளில் இயற்றமிழின் பகுதியாகிய பொருளிலக்கணத்தை, அடிகள் எங்ஙனம் கையாண்டுள்ளனரெனச் சில எடுத்துக் காட்டுகளால் விளக்குவது இச் சிற்றுரையின் நோக்கம். இக்காப்பிய முழுதும் பொருட் பகுதிகள் பலவும் விரவி அமைந்துகிடத்தலை இதன் பதிகத் தொடக்கத்தே அடியார்க்கு நல்லார் விரித்துள்ள உரையால் இனிதுணரலாகும். அவர் அகப்பொருட்டிணைகளாகிய முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல், பாலை என்னும் ஐந்திணைக்குமுரிய நிலனும், பொழுதுமாகிய முதற்பொருள்களும், தெய்வம், உணா, மா, மரம், புள், பறை

தொழில், யாழ், பண், நிலமக்கள், நீர்நிலை, வார்கொடி, பூ என்னும் கருப் பொருள்களும், இருத்தலும் அதன் நிமித்தமும் முதலாகிய உரிப்பொருள்களும் இதன்கண் அமைந்து கிடத்தலை எடுத்துக் காட்டி, அதன் முடிவில், "இச் சொல்லப்பட்ட ஐந்திணையின் முதல் கரு உரிப் பொருளும் பிறவுமாகிய அகத்திணைப் பொருட் பயன் உடம்பொடு புணர்த்தி யுணர்த்திப் புறத்திணைப் பொருட்பயனும் பிறவும் இவ்வாறு உடம்பொடு புணர்த்தி யுணர்த்துங்காற் புனைந்துரைக்கப்பட்டுக் கேட்போர்க்கு இன்பம் பயவாது உணர்வு சலிக்குமாதலின் வந்தன வந்துழிக் காட்டுதலைக் கருதிற்று இவ்வுரை யென்க" எனக் கூறினர். அகப் பொருட்பகுதி பலவும் ஆண்டே அவராற் காட்டப் பெற்றனவாகலின் அவற்றை விடுத்து, அவ்வுழி அவர் காட்டாது விடுத்த புறப்பொருட் பகுதியுள் ஒரு சிலவே ஈண்டுக் காட்ட நிற்பன.

சிலப்பதிகார இந்திர விழவூரெடுத்த காதையில் சோழன் கரிகாற் பெருவளவன் வடதிசைமேற் படையெடுத்துச் சென்ற வரலாறு,

"இருநில மருங்கிற் பொருநரைப் பெறாஅச்
செருவெங் காதலிற் றிருமா வளவன்
வாளுங் குடையு மயிர்க்கண் முரசும்
நாளொடு பெயர்த்து நண்ணார்ப் பெறுகவிம்
மண்ணக மருங்கினென் வலிகெழு தோளெனப்
புண்ணியத் திசைமுகம் போகிய வந்நாள்
அசைவி லூக்கத்து நசைபிறக் கொழியப்
பகைவிலக் கியதிப் பயங்கெழு மலையென
இமையவ ருறையுஞ் சிமையப் பிடர்த்தலைக்
கொடுவரி யேற்றிக் கொள்கையிற் பெயர்வோர்க்கு."

என இளங்கோவடிகளாற் கூறப்பெற்றுளது.

கரிகாலனது இப் படையெடுப்பானது புறத்திணையுள் எதன்பாற் படுமென்பது ஆராய்ச்சிக்குரியது. புறத்திணையிலக்கணப்படி போர்மேற் செல்லுதற்குரிய காரணத்தையேனும், திணைப் பெயரையேனும், திணைக்குரிய அடையாளப் பூவையே

னும் ஆசிரியர் ஈண்டுக் கூறாது, 'வாளும் குடையும் மயிர்க்கண் முரசும், நாளொடு பெயர்த்து' என்னும் துறைக்குறிப்பால் இஃது இன்ன திணையாகுமென்பதனை உய்த்துணர வைத்திருக்கின்றார். நாளொடு பெயர்த்தலாவது நாட் கொள்ளுதல். அஃது இன்னதென்பதனை நாட்கோடலாவது நாளும் ஓரையும் தனக்கேற்பக் கொண்டு செல்வுழி அக்காலத்திற்கு இடையூறு தோன்றிய வழித் தனக்கு இன்றியமையாதனவற்றை அத்திசை நோக்கி அக்காலத்தே முன்னே செல்ல விடுதல்'' என நச்சினார்க்கினியர் விளக்கியிருப்பது கொண்டு அறிக. எனவே, கரிகால் வளவன் தான் போர்க்கோலம் பூண்டு, வடதிசைநோக்கிப் புறப்படுமுன் தன்னுடைய வெற்றிவாள், கொற்றக்குடை, வீரமுரசு என்பவற்றை நன்னாளின் நன்முழுத்தத்தில் வடதிசை நோக்கிப் புறப்பட விடுத்தான் என்பது பெற்றாம்.

இனி இங்ஙனம் வாள்நாட் கொள்ளுதல் முதலியன எத்திணையின்பாற் படுமென ஆராயவுழி ஆசிரியர் தொல்காப்பியனார் கருத்தின்படி உழிஞைப்பாற்படுமெனல் போதருகின்றது. என்னை? அவர் உழிஞைத் திணையின் துறைப்பகுதி கூறும் நூற்பா ஒன்றின் மாத்திரம் "குடையும் வாளும் நாள் கோள்" எனக் குடைநாட் கோளும் வாணாட் கோளும் கூறிப் பிறிதோரிடத்தும் கூறாமையின் என்க. ஆசிரியர் நச்சினார்க்கினியர் வஞ்சித்திணைக்கும் இவை உரிய வென்னும் கருத்தினராயினும், உழிஞைக்குப்போல் வஞ்சிக்கு இவை இன்றியமையாதன வல்ல என்பதும் அவர் கருத்தாதல் "இயங்குபடையரவம்" என்னும் சூத்திர வுரையால் அறியப்படும். அவர், இவை வஞ்சிக்கு இன்றியமையாதனவன்மையின் 'இயங்கு படை யரவம்' என்பதனுள் அடங்க வைத்து, உழிஞைக்கு இன்றியமையாமையின் ஆசிரியர் ஆண்டுக் கிளந்தோதினர் என்பர். பன்னிரு படலத்தின் வழிநூலாகிய புறப்பொருள்வெண்பாமாலை யுடையாரோ வஞ்சி, காஞ்சி, உழிஞை என்னும் மூன்று திணைக் கண்ணும் குடை நாட்கோளும், வாணாட் கோளும் கூறுவர். இவற்றுட் காஞ்சியை வஞ்சியின்பால் அடக்கினும் வஞ்சி, உழிஞை என்னும் இருதிணைக்கும் அவ்விரு துறையும் உரிய

வென்பது அவர் கருத்தாகும். சிலப்பதிகாரத்திற் போந்த எழுத்தின் றிறனறிந்தும் இன்சொற் பொருளின் அழுத்தந் தனை அறிந்தும் இப்படியார்க்கு நல்லுரை பாலித்த அடியார்க்குநல்லார் 'வாளுங் குடையும்......நாளொடு பெயர்த்து' என்னுந் தொடர்க்குச் சிறப்புரை கூறுமிடத்து வெண்பாமாலையின் வஞ்சிப் படலத்தில் அவ்விரு துறைக்கும் அமைந்த,

"செற்றார் மேற் செலவமர்ந்து
கொற்றவா ணாட்கொண்டன்று"
"பெய்தாமஞ் சுரும்பிமிரப் பெரும்புலவர் புகழ்பாடக்
கொய்தார் மன்னவன் குடைநாட் கொண்டன்று"

என்னும் கொளுக்களையும்,

"அறிந்தவ ராய்ந்தநா ளாழித்தேர் மன்னன்
எறிந்தில கொள்வாளி யக்கம்—அறிந்திகலிப்
பின்பகலே யன்றியும் பேணா ரகநாட்டு
நன்பகலுங் கூகை நகும்."

"முன்னர் முரசிரங்க மூரிக் கடற்றானைத்
துன்னருந் துப்பிற் றொழுதெழா—மன்ன
ருடைநாளு வந்தனவா லோதநீர் வேலிக்
குடைநா ளிறைவன் கொளா."

என்னும் வெண்பாக்களையும் மேற்கோளாகக் காட்டி யிருப்பதிலிருந்து அவர் கரிகாலனது போர்ச் செலவை வஞ்சித்திணையின் பாற் படுத்தனர் போலும் எனக் கருத இடனுண்டாகின்றது. அவர் கருத்து யாதாயினும் கரிகாலன் கூடார் மண்கொளல் கருதியோ, அன்றித் தனது மண்ணினைக் கொள்ளுதல் கருதி மாற்றாரோடு பொருதல் குறித்தோ புறப்பட்டானென்பது சிறிதும் பெறப்படாமையின் அதனை வஞ்சி யென்றல் பொருத்தமுடைத்தன்று. இனி, திருமாவளவன் போரிலேமிகு விருப்புடையனாகலின் வட திசை நோக்கிப்போயினன் என்பதுகொண்டு அதனைத் தும்பைத்திணை என்னலாமெனின், ஆசிரியர் ஒருவரும் வாணாட்கோடல் முதலியவற்றை அத்திணைக்குக் கூறாமையின் அங்ஙனம் உரைப்பதும் பொருந்துவதன்றாம். இவ்வாற்றால்,

கரிகாலனது வடதிசைப் படையெடுப்பு உழிஞைத்திணையா மென்றலே செவ்விது.

ஆயின், 'முழுமுதலரணம் முற்றலும் கோடலும்' ஆகிய உழிஞையிலக்கணந்தானும் அதன்கட் பெறப்பட்டிலதே யெனின், இமயமலையானது குறுக்கிட்டு விலக்கிற்றென்று அவன் முனிந்து அதன் பிடரிலே தனது புலியைப் பொறித்து மீண்டான் என்று சொல்லப்படுதலின் அதனையே பகைவரது அரணமுற்றிய செயலாகக் கொண்டு உழிஞையிலக்கணம் பொருந்தியுள்ளவாறு காண்க. மற்று, அதனை உழிஞை என்பதற்கு வேறு ஏதுக்களும் உள. ஆசிரியர் தொல்காப்பியனார் குடைநாட்கோளும் வாள்நாட்கோளும் கூறினரன்றி, முரசு நாட்கோள் என ஒன்று கூறினரல்லர். வெண்பாமாலை யுடையாரும் அங்ஙனமே முரசு நாட்கோள் கூறிற்றிலரேனும், உழிஞைப் படலத்தில் வாணாட்கோள் என்னும் துறையை அடுத்து முரசவுழிஞை என்பதோர் துறை கூறியுள்ளார். எனவே, இளங்கோவடிகள் கூறிய முரசு நாட்கோளுக்கு வெண்பாமாலையின் உழிஞைப் படலத்தில் மாத்திரமே ஒருவாறு இலக்கணம் காணப்படுதலானும், செங்குட்டுவனது வடதிசைமேற் செலவை வஞ்சியின்பாற் படுத்துரைக்கக் கருதிய அடிகள் இதனோடு அதனிடை வேற்றுமை புலப்பட

"இருநில மருங்கின் மன்னரெல் லாரின்
திருமலர்த் தாமரைச் சேவடி பணியும்
முழுத்த மீங்கிது முன்னிய திசைமேல்
எழுச்சிப் பாலை யேசென் றேத்த
மீளா வென்றி வேந்தன் கேட்டு
வாளுங் குடையும் வடதிசைப் பெயர்க்கென"

என்று கால்கோட் காதையில், செங்குட்டுவற்கு வாணாட்கோளும் குடைநாட் கோளும் கூறி, முரசு நாட்கோள் கூறாமையானும் கரிகாலனது போர்ச்செலவு உழிஞைத்திணையாமென்பது வலியுறுதல் காண்க. இன்னும் முரசு நாட்கோளுக்கு அடியார்க்கு நல்லார் எடுத்துக்காட்டிய "மாசற விசித்த" என்னும் புறப்பாட்டில்,

"மஞ்ஞை ஒலிநெடும் பீலியொண்பொறி மணித்தார்
பொலங்குழை யுழிஞையொடு பொலியச் சூட்டிக்
குருதி வேட்கை யுருகெழு முரசம்
மண்ணி வாரா வளவை"

என உழிஞைமாலை கூறப்பட்டிருத்தல் இதனை நன்கு வலியுறுத்துமாறும் காண்க. இதனால் அடியார்க்குநல்லாரும் இஃது உழிஞையன்றென்னும் கருத்தினரெனத் துணிதல் செல்லாதென்க.

இனி, இதுகாறும் காட்டியவற்றிலிருந்து இளங்கோவடிகள் தொல்காப்பியத்தையே யன்றிப் பன்னிரு படலத்தையும் தழுவியுள்ளாரென்பது போதரும். எனினும்,

"பொன்புனை யுழிஞை சூடி மறியருந்துந்
திண்பிணி முரச நிலையுரைத்தன்று"

என்னும் வெண்பாமாலையின் முரச வுழிஞைக் கொளுவானும்.

"குருதி வேட்கை யுருகெழு முரசம்"

என்னும் புறப்பாட்டடியானும் வீரமுரசிற்குப் பலியூட்டுதல் பெறப்படுவதன்றி, அதனை நாட்கொண்டு பெயர்த்தல் பெறப்படாமையின், அடிகள் இவ்விருநூலேயன்றி அக்காலத்து வழங்கிய வேறு நூல்களினும் இலக்கணங் கண்டோ, அன்றித் தங்காலத்து வேந்தரது வழக்கிற்கண்டோ வீரமுரசினை நாட்கொள்ளுமாறும் கூறிப் போந்தனரென்க. இங்ஙனமே, தொல்காப்பியம் முதலியவற்றின் வேறாக அடிகள் தங்கொள்கையை நாட்டிச் செல்லுதல் பிறாண்டும் காணப்படும். (தொடரும்)

தஞ்சை சீனிவாச பிள்ளை

தமிழ் வரலாற்றின் ஆராய்ச்சி

[இது 26-3-1922ல் தஞ்சை K. S. சீனிவாச பிள்ளையவர்கட்குத் திருவாளர் தி. த. கனகசுந்தரம் பிள்ளையவர்கள் B. A. எழுதிய கடிதத்தினின்றும் எடுத்துப் பதிப்பிக்கப்பட்டது.]

தமிழ் நாட்டெல்லை கூறுமிடத்து அந்நாட்டிற்குத் தெற்கெல்லை'குமரியாறென்றும் "குமரியோராற்றின்குறி என்பதுதமி

மறிஞர் பலரும் அறிந்ததே" என்றும் கூறுகின்றீர்கள். குமரி யாறு எனப் பலரும் வழங்குவது மெய்; ஆயினும் குமரி ஓர் யாற்றின் குறி என்பதற்கு ஆதார மென்னை? பழைய நூல்களில் குமரி ஓர் யாறு என்று கூறியுள்ளதாக எனக்கு ஞாபகமில்லை. சிலப்பதிகாரத்து வேனிற் காதையில், "நெடியோன் குன்றமும் தொடியோள் பௌவமும்" என்றும் காடு காண் காதையில், "பன்மலை யடுக்கத்துக் குமரிக் கோடும்" என்றும் கூறியுள்ளது. இவற்றால் குமரி என்பது ஒரு கடற்கரையின் பெயராதல் வேண்டும். கோடு, கரை அல்லது முனை என்று பொருள்படும். "கொண்டல் பயின் மணற் கோடு சூழ் கோடிக் குழகர்தமை"—பெரியபுராணம், சம்பந்தர், 622 என்று வருதல் காண்க. கோடி ஒரு மணல் முனை— Point Calimere. அது போலவே குமரியும் ஒரு முனை—Cape Comorin. "பன்மலையடுக்கத்துக் குமரிக்கோடு" என்னுமிடத்துக் கோடு என்பதை மலை என்று கொள்ளலாம். அவ்வாறு கொண்டால், அது வேனிற் காதையில் 'தொடியோள் பௌவம்' என்றதனோடு மாறுபடும். காடு காண் காதையில்

"வடிவே லெறிந்த வான்பகை பொறாது,
பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக்
குமரிக் கோடுங் கொடுங்கடல் கொள்ள"

என்று கூறியது இங்கே ஆராயத் தக்கது. ஒன்றைப் பஃறுளி யாறென்றும் மற்றொன்றைக் குமரிக் கோடென்றும் விகற்பித்ததனால், குமரி யென்பது யாறு ஆகாது, மற்றொன்றாதல் வேண்டும். கோடென்பதை மலை யென்று கொள்ளலாகாதென்று மேற் கூறினமையின், கோடென்பது இங்கே கரையை அல்லது முனையையே குறித்ததாதல்வேண்டும். ஆதலால், "வடவேங்கடம் தென்குமரி" என்னு மிடத்து "வடக்கண் வேங்கடமும் தெற்கண் குமரியாறும்," என்று பொருள் கொள்ளாது, வடக்கண் வேங்கட மலையும் தெற்கட் குமரிக் கோடும் என்று பொருள் கொள்ளல் வேண்டும்.

தெற்கே குமரி யென்று ஒரு யாறு இருந்த தென்பதற்கு

ஆதார மொன்று மில்லை. தெற்கே தமிழ் நாட்டிலே பல்லா யிர வருடங்கட்குமுன் அப்படி ஒரு யாறு இருந்ததாயின், அதன் பெயர் தமிழ் மொழியாயன்றி அன்னிய பாஷை மொழியாய் இருந்திருக்க மாட்டாது. குமரி யென்பது தமிழ் மொழி யன்று ; வடமொழி. இப் பெயர் தென்றமிழ் நாட்டைக் கடல் கொண்ட பின்னரே, ஆரியர் தமிழ் நாடு வந்து ஆரிய மொழி தமிழ் மொழி யோடு கலந்தபின் தோன்றி யிருத்தல் வேண்டும். குமரிக் கோட்டுக்குத் தெற்கே யிருந்த நாடுகளைக் கடல் கொண்டது சரித்திர காலத்தன்று ; அது நிகழ்ந்து பல்லாயிர வருடங்களாயின. **தொல்காப்பியம்** இயற்றியது ஆரியர் தமிழ் நாட்டு வந்து ஆரிய மொழி தமிழ் மொழி யோடு கலந்ததன் பின்; அஃதாவது, ஏறக் குறைய **இரண்டாயிர வருடங்களு**க்கு முன்; பல்லாயிர வருடங்களுக்கு முன் பன்று. ஆதலால், தொல்காப்பியப்பாயிரத்துக் கூறப்பட்ட தெற்கெல்லையாகிய குமரி யென்பது குமரியாறன்று, குமரிக் கோடே.

தமிழ் நாட்டின் உட்பிரிவு

இத்தலைப்பின் கீழ்த் தொல்காப்பிய உரையாசிரியர்கள் கொடுந்தமிழ் நாடு பன்னிரண்டென்றும் அவற்றின் பெயர்:

> **"தென்பாண்டி குட்டம் குடங்கற்கா வேண்பூழி**
> **பன்றி யருவா அதன்வடக்கு—நன்றாய**
> **சீதம் மலாடு புனனாடு செந்தமிழ்சேர்**
> **ஏதமில் பன்னிருநாட் டெண்"**

என்று கூறினார்கள்என்றும் எழுதுகின்றீர்கள், இது சரியென்று தோன்றவில்லை. செந்தமிழ் நிலத்தைச் சேர்ந்த கொடுந்தமிழ் நாடு பன்னிரண்டென்பதுமெய்யாயினும், அவற்றின் பெயர் தாங்கள் கூறியனவல்ல. "பன்னிரு நிலமாவன பொங்கர் நாடு, ஒளிநாடு, தென் பாண்டி நாடு, குட்ட நாடு, குட நாடு, பன்றி நாடு, கற்காநாடு, சீத நாடு, பூழி நாடு, மலை நாடு, அருவா நாடு, அருவாவட தலை நாடு எனச் செந்தமிழ் நாட்டுத் தென்கீழ்பான் முதலாக வடகீழ்பாலிறுதியாக எண்ணிக் கொள்க" என்று சேனாவரையர் கூறுவர். இதனைப்படியெடுத்து எழுதுவர் நச்சி

னார்க்கினியரும். உரையாசிரியரும் இப்பன்னிரண்டனையுமே கூறினர். பேராசிரியரும் கல்லாடரும் கூறுவது யாவை யென்பது தெரியவில்லை. (அவ்வுரைப் பிரதிகள் இப்போது என்னிடத்தில் இல்லை.) இவற்றில் தாங்கள் எடுத்துக்காட்டிய பாட்டிலுள்ள வேணாடும், புனனாடும் கூறப்பட வில்லை. அவற்றுக்குப் பதிலாகப் பொங்கர் நாடும் ஒளி நாடும் வருகின்றன. அன்றியும், தாங்கள் எழுதிய படத்தில் பன்றிநாடு மேற்கூறிய முறைக்கு மாறாகக் கிழக்கில் காட்டப்பட்டுள்ளது. அதற்கு ஆதாரமென்னை ?

பூழி நாடு தாங்கள் காட்டியபடி குட்ட நாடு குட நாடுகட்கு வடக்கிலன்றித் தெற்கில் உளதாதல் வேண்டும். பூழியன் என்று சேரனுக்கும் பாண்டியனுக்கும் பெயருண்டு.

"பூழிய னுதியன் கொங்கன் பொறையன்"

என்பது பிங்கலம் ;

"பூழியர் கோவே பொலந்தேர்ப் பொறைய"

என்பது பதிற்றுப்பத்து, 84.

இவை யிரண்டும் சேரனைக் குறித்தன.

"பூழியர்கோன் வெப்பொழித்த புகலியர்கோ னடி போற்றி"

என்பது சேக்கிழார் புராணம், 6.

"பூழியர் தமிழ்நாட்டுள்ள பொருவில் சீர்ப்பதிக ளெல்லாம்"

என்பது பெரிய புராணம், சம்பந்தர், 601.

"பூழியர் வண்டமிழ் நாட்டு"

என்பதும் பெரிய புராணம், சம்பந்தர், 653.

இவை மூன்றும் பாண்டியனைக் குறித்தன. இவ்விருவருக்கும் பூழியன் என்று பெயர் வந்தது இவர்கள் ஒவ்வொரு காலத்துப் பூழிநாட்டையாண்டமையின். ஒரு காலத்துச் சேரனதாயும், மற்றொரு காலத்துப் பாண்டியனதாயும் இருத்தற்குப் பூழி நாடு அவ்விருவர் நாட்டுக்கும் இடையில் உள்ளதாதல் வேண்டும் ; அஃதாவது பாண்டி நாட்டுக்கும் சேர நாட்டுக்கும் இடையில். திருவெட்டாற்றுத் தாமிரபர்ணிநதி சங்கமத்தி

விருந்து மூவாற்றுப்புழை வரையிலுள்ள நாடே பூழி நாடு போலும், இங்கே பூழி யென்றோர் ஊர் உளது. அது திருநெல் வேலிக்கும் திருவாங்கூருக்கும் இடையிலுள்ள கடுக்கரைமலைக்கு மேற்கே ஆறுமைல் தூரத்தில் உளது. இந்நாட்டைப் பூழி நாடென்று குறிக்கின்ற சாஸனங்களுமுள போலும். சில வருஷங்களுக்கு முன் அவற்றைப் படித்த ஞாபகம் எனக்குண்டு. அவை எவை யென்பது இப்போது ஞாபகம் இல்லை. இஃது இன்னும் ஆராயத்தக்கது.

"தென் பாண்டிகுட்டம்" என்றற் றொடக்கத்துச் செய்யுள் தொல்காப்பிய உரையாசிரியர்கள் காட்டிய தொன்றன்று; நன்னூலுரையாசிரியர் காட்டியது. மயிலைநாதருரையில் அச் செய்யுள் சில பாடபேதத்துடன் காணப்படும். அது வருமாறு:—

> "தென்பாண்டி குட்டம் குடங்கற்கா வேள்பூழி
> பன்றி யருவாள் அதன்வடக்கு—நன்றாய
> சீதமலாடு புனனாடு செந்தமிழ் சேர்
> ஏதமில்சீர்ப் பன்னிருநாட் டெண்"

இச் செய்யுள் பிற்காலத்ததாதலால், தொல்காப்பியர் குறித்த பன்னிரு நிலத்திற்குத்தக்க ஆதாரமாகாது; தொல்காப்பிய உரை சிரியர்கள் கூறிய பன்னிரண்டு நாடுகளே கொள்ளத்தக்கன.

இனிச் "செந்தமிழ் நிலம்' என்பது வையையாற்றின் வடக்கு மருதயாற்றின் தெற்கு கருவூரின் கிழக்கு மருவூரின் மேற்கு என்பர் உரையாசிரியர். சேனாவரையரும் நச்சினார்க்கினி யரும் இதனையே கூறுவர். இதில் வேறுபாடில்லை யாயினும் மருதயாறு யாதென்பதும் மருவூர் எங்குள தென்பதும் தெரியா. மருவூர் காரைக்காற் பக்கத்தில் உளதென்பர். இவற் றைத் தாங்கள் ஆராய்ந்து சந்தேகமற இவையென்று தெரித் திருத்தல் வேண்டும். தஞ்சை நாட்டில் உள்ளவரே இதனைத் தெரிவித்தற்குரியர்.

தமிழ் என்னும் பெயர் தமிழ்மொழியே

இந்தத் தலைப்பின்கீழ் தாங்கள் தமிழ் என்பது வடமொழி யின் சிதைவென்பதை மறுத்து "ழகரத்தை உச்சரித்தறியாத

ஆரியர் திரவிடம் அல்லது திரமிளம் என்றதில் நின்றும் தமிழ் என்னும் பெயர் பிறந்தது என்பது சிறிதும் பொருத்தமுடைய தாகத் தோன்றவில்லை'' என்று கூறி, ஸ்ரீமான் சி. வை. தாமோ தரம் பிள்ளையவர்கள் அச் சொல்லைப்பற்றி எழுதியதை எடுத் துரைத்துள்ளீர்கள். இதனால், அவ்விஷயம் முடிவுபெற்றதாகக் காணவில்லை. தமிழ் என்பதிலிருந்து திரமிளம் என்னும் பதந் தோன்றுவதைப பார்க்கினும் திரமிளம் என்பதிலிருந்து தமிழ் என்னும் பதம் தோன்றுவதே பொருத்தமுடைத்து. பிரதீகம், பிரவாளம், பிரமரம், சிரேட்டி, குரோதம், பிரணவம் முதலாய வட சொற்கள் தமிழில் பதிகம், பவளம், பமரம், செட்டி, கோதம், பணவம் என்று சிதைந்து வருவது காண்க. அங்ஙன மாயின், திரமிளம் தமிள் என்றன்றோ வருதல் வேண்டும்; தமிழ் என்று ழகரம் வருதற்குக் காரணமென்னை யெனின், சிதைவுக் குக் காரணங் கூறவேண்டியதில்லையன்றே. அன்றியும் தமிழ் என்பது தென்தேசத்தில் தமிள் என்றும் பிரவாளம் என்னும் வடசொல் தமிழ்நாட்டின் வடபாகத்தில் பவழம் என்றும் வழங்குவது திரமிளம் தமிள் என்றாயதற்குப் போதிய சான் றாகும்.

தமிழ் என்னும் பதம் தமிழ்மொழியே என்பதற்கு ஸ்ரீமான் தாமோதரம் பிள்ளையவர்கள் கூறும் நியாயம் ஒன்றும் பொருந் துவதாயில்லை. தமிழில் தமிழ் என்னும் பதந் தோன்றுமுன் னர்ச் சமஸ்கிருதத்தில் திராவிடம் என்னும் மொழி தமிழையே உணர்த்திற்று. உலகத்தில் எஞ்ஞான்றும் பொருளேமுந்தியது. ஆயினும் பொருளுள்ள விடத்திலேயே அதற்குப் பெயர் தோன்ற வேண்டும் என்னும் நியதியில்லை. ஒரு பொருளைப்பற்றி உரையாட நேர்ந்த விடத்தே அதற்கொரு பெயரிடவேண்டி வரும். அல்லாதவிடத்துப் பெயர் தோன்றாது. தம் பாஷைக்குப் பெயரிடவேண்டிய அவசியம் நேராமையால், தமிழர் அதற்குப் பெயரிடாதிருந்தனர். ஆரியர்க்கு அவ்வவசியம் நேர்ந்த மையின், அவர் அதற்குத் திரவிடம், அல்லது திரமிளம் என்று பெயரிட்டனர். அன்றியும் தமிழ் என்பதிலிருந்து தமிழர் என்னும் பதம் வந்ததன்று; தமிழர் என்பதிலிருந்து

தமிழருடைய பாஷை என்னும் பொருளில் தமிழ் என்னும் பதம் தோன்றிற்று. இதுவே முறை. தெலுங்கருடைய மொழி தெலுங்கு; கருநாடருடைய மொழி கருநடம்; மலையாளருடைய மொழி மலையாளம்; ஆரியருடைய மொழி ஆரியம்; அங்கிலருடைய மொழி அங்கிலம் என்பன காண்க. இலக்கணக் கொத்துடையாரும் "தெலுங்கன் சொல்லுதற் றொழிலையுடைய பாடை தெலுங்கன் சொலலு எனற் பாலது தெலுங்கு எனப் பின் மொழி கெட்ட முன் மொழியீற்றின் விகுதி பொருந்தியது; வடுகுமது" என்று கூறுவர்—சூத்திரம் 117.

அகத்தியம்

அகத்தியத்தைப் பற்றிக் கூறுமிடத்து அது முத்தமிழிலக்கணமு மடங்கிய தென்றும் பன்னீராயிரம் சூத்திரங்கொண்டதென்றும் கூறுகின்றீர்கள். அகத்தியம் முத்தமிழிலக்கணமுங் கூறுவதென்று பேராசிரியர் முதலியோர் கூறுவர்; மற்று அது பன்னீராயிரஞ் சூத்திரமுடைய தென்று உரையாசிரியர் யாவராவது சொல்வதாய் யானறியேன். அகத்தியம் தொல்காப்பிய உரையாசிரியர் காலத்திலிறந்துவிட்டதென்றால், அதன் சூத்திரத் தொகையை அவரறிவ தெப்படி? உவின்சிலோப் பாதிரியார் அகத்தியம் பன்னீராயிரம் சூத்திரமுடைய தென்று கூறுவர். அக்கூற்றுக்கு ஆதாரம் ஏதேனு முளதாகக் காணவில்லை.

இனி "இலக்கண மென்பதிலக்கிய முறையுற", "இலக்கியமின்றி யிலக்கணமின்றே" என்றற் றொடக்கத்துச் சூத்திரங்கள் அகத்தியச் சூத்திரமல்ல. பிற்காலத்தார் செய்தவை, அகத்தியர் காலத்தில் மாத்திரமன்று, தொல்காப்பியர் காலத்தில்கூட இலக்கணம், இலக்கியம் என்னும் வடமொழிகள் தமிழில் வந்து வழங்கவில்லை. தொல்காப்பியர் இலக்கணத்தை இயலென்றுங் குறியென்றுங் கூறுவர்.

அகத்தியர் காலம்

அகத்தியர் இராமர் காலத்திலேயே தென்னாட்டுக்கு வந்துவிட்டாரென்று கூறி, அவர் அக்காலத்தில் பொதிய மலையி

விருந்தா ரென்பதற்கு ஆதாரமாகக் கிஷ்கிந்தாகாண்டம் நாற்பத்தொன்ருஞ் சருக்கத்துச் சுலோகங்களை எடுத்துக் காட்டுகின்றீர்கள். ஆரணிய காண்டம் 11, 12, 13-ம் சருக்கங்களில் அகத்தியருடைய ஆசிரமம் கோதாவரி நதிக்கருகில் பஞ்சவடிக்கு இரண்டு யோசனை தூரத்திலிருப்பதாகக் கூறப்பட்டுளது. இராமர் அங்கே சென்று அகத்தியரைச் சேவித்து அவரிடமிருந்து வில்லும வாளும் அம்பும் அம்பறுத்தூணியும் பெறுகின்ருர். இதனேடு கிஷ்கிந்தாகாண்டத்துச் சுக்கிரீவன் சொல்வது முரணுகின்றது. சுக்கிரீவன் சொல்வது இந்தியாவின் தேசப் பிரிவுகள், யாறுகள் மலைகளைப்பற்றி யாதலால், அது, பின்னர்ப் பூகோள சாஸ்திர வுணர்ச்சி யுண்டாய காலத்துச் சேர்த்ததாதல் வேண்டும்.

அது நிற்க. நமது புராணேதிகாசங்களிற் கூறப்படும் அகத்தியர் ஒருவரா? இருவரா? அன்றேல் பலரா? இருக்கு வேதத்திலுள்ள பல மந்திரங்களுக்கு ஆசிரியரான அகத்தியர் ஒருவருளர். அவர் மைத்திராவருணி என்றும் ஔர்வசியர் என்றும் சொல்லப்படுவர்; மித்திரனுக்கும் வருணனுக்கும் புத்திரனக ஊர்வசி வயிற்றிற் பிறந்தமையின். இருக்கு வேதத்திற்கு உரை யெழுதிய சாயனர் அகத்தியரை நீர்க்குடத்தில் பிறந்தவரென்று கூறுவர். அதனுல் அவருக்குக் கடோற்பவர் என்றும் கும்பயோனி யென்றும் கலசயோனி யென்றும் பெயருண்டு. புராணங்கள் அகத்தியரைப் புலஸ்தியருடைய புத்திர னென்று கூறும். இவருள் எந்த அகத்தியர் நமது தமிழிலக்கணம் செய்தவர்? இருக்குவேத மந்திரம் பாடிய அகத்தியரே தமிழிலக்கணமுஞ் செய்தாரா? அக் காலத்திலே இலக்கணம், இலக்கியம் என்னும் சொற்கள் ஆரிய பாஷையில் தோன்றி விட்டனவா? அகத்தியரைப் பற்றிய ஆக்ஷேபம் இன்னும் பலவுள.

இன்னும் தாங்கள் வால்மீகி ராமாயணத்தை ஆதி காவியமென்றும் அது செய்யப்படுமுன் சமஸ்கிருத பாஷையில் சுலோகங்களே யிருந்ததில்லை யென்றும் கூறுகின்றீர்கள். இருக்குவேதம் இராமாயணத்துக்கு முற்பட்டதோ? பிற்பட்டதோ? ஆல

முற்பட்டதாயின் அதிலுள்ள அநுஷ்டுப்பு முதலிய சுலோகங்கள் எப்போது தோன்றின? இராமாயணத்துக்குப் பின்போ? ஆதிகாவியம் என்பதற் கர்த்தம் முதன் முதல் தோன்றிய காவியம் என்பதன்றி முதன் முதல் தோன்றிய சுலோகமென்பதன்று. இராமாயணமதான் சமஸ்கிருதத்தில் முதன் முதல் தோன்றிய காவியம்.

தமிழ்ச் சங்க காலம்

தமிழ்ச் சங்கங்களைப் பற்றிப் பேசுமிடத்து இறையனார் களவியலுரையில் கூறியதை எடுத்துரைத்து "இவர் கொள்கைப் படித் தமிழ்ச்சங்கந் தொடங்கியது இற்றைக்கு 12,000 யாண்டு களுக்கு முன்னர் என்பது தவறாகாது" என்கின்றீர்கள். இவர் கொள்கை என்பது யார் கொள்கை? களவியலுரையின்படி தொல்காப்பியம் இடைச் சங்கத்தாருக்கு நூலாயிருந்ததன்றோ? அங்ஙனமாயின் அது ஏழாயிரம் வருடங்களுக்குமுன் தோன்றியிருத்தல்வேண்டும. அக்காலத்திலே பொருளதிகாரத்துக் களவியல் நாற்பத்துநான்காஞ் சூத்திரத்தில்வரும் ஓரை என்னும் சொல் சமஸ்கிருதத்தில் வந்துவிட்டதோ? ஓரைஎன்பது கிரேக்கபாஷைச் சொல் என்கின்றார்களே.

இனி, முதற் சங்கத்திருந்த முடிநாகராயரும், நிதியின் கிழவனும், இடைச் சங்கத்திருந்த வெள்ளூர்க்காப்பியனும் சிறுபாண்டரங்கனும் துவரைக்கோமானும் என்னுமிவர்களுடைய பெயர் வடமொழிப் பெயர்களாயுளவே. ஆகவே பன்னீராயிரம் வருடங்களுக்கு முன்னரேயே ஆரியர் தென்னாட்டுக்கு வந்து விட்டனரோ?

கடைசியாகச் சங்கமென்னுஞ் சொல் தமிழில் எப்போது வந்தது? தொல்காப்பியர் காலத்தில் சகர முதன்மொழி தமிழில் இல்லையன்றோ? சங்கநூல்களிலும் அப்பதம் காணவில்லையே. ஆகவே முதற்சங்கம் இடைச்சங்கங்களை அக்காலததார் என்ன பெயரிட்டுக் கூறினர்? (தொடரும்)

நவராத்திரியும் சரஸ்வதி பூசையும் உண்மை விளக்கம்

[இத்தலைப்பிட்டுத் திரு. வெங்கடகுருநாத சாஸ்திரியார் வெளியிட்ட துண்டுத்தாளில் கண்டுள்ள போலி உரைகளின் மறுப்பும் உண்மை நிலையீடும்.]

மெய்கண்டான் யாண்டு 707, நிகழும் பிரமோதூத஁ புரட்டாசிமீ 14உ (30-9-30) செவ்வாய்க்கிழமை யன்று மகா நவமியைப் பலர் கொண்டனர். சிலர் 15உ புதன்கிழமை யன்று கொண்டனர். நமது சைவப் பஞ்சாங்கத்தில் 14உ யன்றுதான் மகா நவமி சரசுவதி பூசை என்று குறித்திருக்கிறோம். ஆனால் திரு. வெங்கடகுருநாத சாஸ்திரியார் தமது பஞ்சாங்கத்தில் 15உ யன்றுதான் மகா நவமி என்று குறித்ததோடு அமையாமல் தாம் குறித்ததே சரி என ஓர் துண்டுத் தாள் அச்சிட்டு 25-9-30-ல் வெளிப்படுத்தி யிருக்கிறார். ஆகையால் உண்மை இது என விளக்கிக்காட்ட வேண்டியது எமக்கு இன்றியமையாத கடமையாகிறது.

சாத்திரியார், "நாளது பிரமோதூத஁ புரட்டாசிமீ சரஸ்வதி பூஜையை 'நவமிக்கு அஷ்டமியோகம் விசேஷம்' என்றும் 'தசமியோகம் கூடாது' என்றும் ஒரு கிரந்த வசனம் எழுதி அதனால் 14உ செவ்வாய்க்கிழமை யன்று சிலர் சொல்லுகிறார்கள். அது சரியல்ல. மஹா நவமி என்பது வடதேசங்களில் பலிஹோமங்களுடன் செய்யப்படுகிற பத்திரகாளி பூஜையைக் குறிப்பிடுவது. புஸ்தகங்களில் சரஸ்வதியை ஆவாஹித்து பூஜிப்பது சரஸ்வதி பூஜை. இதுதான் தென்தேசங்களில் வழக்கமாய் அனுஷ்டிக்கப்படுகிறது. மஹா நவமி பூஜைக்குத்தான் தசமியுடன் சேர்ந்த நவமி கூடாதென்பது கருத்து. மேற்கூறியபடி மஹா நவமி பூஜை இவ்விடங்களில் அனுஷ்டானமில்லை. அதனால் மஹா நவமி என்பதும் சரஸ்வதி பூஜை என்பதும் ஒரே விரதமும் அல்ல; ஒரே பூஜையும் அல்ல.........ஆல

யங்களிலும் புஸ்தகங்களில் ஆவாஹித்து ஷெ பூஜை செய்யப் படுகிறது.........மேலும் நவராத்திரி மத்தியில் மஹா நவமி பூஜையைப்போல் துர்க்காஷ்டமி என்ற மஹாஷ்டமியில் துர்க்கா பூஜையும், பஞ்சமியில் உபாங்கல்லிதா பூஜையும் ஏற் பட்டிருக்கிறது. நவராத்திரி பூஜைக்கும் மஹாநவமி முத லிய ஷெ மூன்று பூஜைகளுக்கும் ஒரு சம்பந்தமும் கிடையாது. ......பிரதமை முதல் நவமி முடிய ஒன்பது நாள் பூஜையே நவராத்திரி எனப்படும்" என்று எழுதியிருக்கிறார். இதனால் நமது சாத்திரியாருக்கு நவராத்திரி, மகா நவமி, சரசுவதி பூஜை என்பவைகளைப்பற்றிய விவரமே தெரியவில்லை என்பது சிறு பிள்ளைகளுக்கும் விளங்கும். ஏனெனில் **நவராத்திரி** என்பது ஒன்பது இரவு என்றும், ஏனைய மாதங்களில் வரும் நவமியைப் போல் இல்லாமல் உலக மாதாவாகிய பார்வதிதேவியாரை வழி பட்டு விழாக்கொண்டாடும் நாளாக இருத்தலின் அது **மகா நவமி** என்றும், நவராத்திரியில் தேவியை முதல் மூன்று இரவு களில் துர்க்கையாகவும் இரண்டாவது மூன்று இரவுகளில் இலக்குமியாகவும் மூன்றாவது மூன்று இரவுகளில் சரசுவதி யாகவும் வழிபட்டு வருவதில் ஏனைய எட்டு நாட்களில் வழி படாது போயினும் அனைவரும் கட்டாயம் வழிபட வேண்டிய நாளாகிய மகா நவமியன்று சரசுவதியாகவே பூசிக்கவேண்டிய திருத்தலின் ஒன்பதாவது இரவு **சரசுவதி பூசை** எனப் பெயர் பெற்றது என்றும் அவர்கள் அறிவர். மகா நவமி என்பதும் சரசுவதி பூசை என்பதும் ஒன்றே. அதுவே நவராத்திரி விழா வின் கடைசி நாள் என்று இந்துக்களால் கொண்டாடப்பெறு கிறது.

நவராத்திரி பூசை என்பது சரசுவதிபூசை தான் என்று கருதுகிற சாத்திரியார் தமது துண்டுத் தாளில் "பிரதமை முத லிய ஒன்பது திதிகளில் ஒன்பது தேவி பூஜை எக்காலத்திலும் ஏற்படவேண்டும்" என்று எழுதுகிறார். ஒன்பது தேவிகள் யாவர்? சரசுவதி பூசைதான் தென்நாடுகளில் நடப்பது, வட நாடு களில் மகா நவமி பூசை நடை பெறுகிறது என்று தப்பாக எண்ணும் அவர் தென் நாடுகளிலும் தென் கோடியாக இருக்

கிற திருநெல்வேலியில் தாம் வெளிப் படுத்தும் பஞ்சாங்கத்தில் சரசுவதி பூசையைக் குறிக்க வேண்டியது இன்றியமையாத தல்லவா ? அவர் ஒன்றிரண்டு ஆண்டுகளில் மட்டும் மகா நவமி சரசுவதி பூசை என்று குறித்திருக்கிறாரே ஒழிய தாம் பஞ்சாங்கம் வெளியிடும் சென்ற சுமார் இருபத்தைந்து ஆண்டுகளிலும் இருபத்து நான்கு ஆண்டுகளில் தமது பஞ்சாங்கங்களிலெல்லாம் மகா நவமி என்று மட்டுமே குறித்திருக்கிறார். மேலும் அவருடைய தந்தையாகிய திரு. இராமலிங்க ஜோஸ்யருடைய பஞ்சாங்கங்களிலும் மகா நவமி என்ற பெயரைத் தவிர சரசுவதி பூசை என்ற பெயரைக் காண்டலே அரிதாயிருக்கிறது. இதனால் நமது சாத்திரியார் "நவமிக்கு அஷ்டமியோகம் விசேஷம், தசமி யோகம் கூடாது" என்ற வாக்கியத்தின்படி தமது பஞ்சாங்கம் பிழைபடுவதைக் கண்டு அஞ்சித் தமது குற்றத்தை மறைப்பதற்காக "மகா நவமிக்குத்தான் அந்த வாக்கியம், சரசுவதி பூசைக்கு அன்று" என்று கூறி மழுப்பித் தப்பிக்கப் பார்க்கிறார். அவரே சென்ற விபவ ௵ "நவராத்திரி விஷயமாய் ஓர் முக்கிய கவனிப்பு" என்று மகுடமிட்டு மீனும்பிகை பிரசில் அச்சிட்டு வெளிப்படுத்திய துண்டுத் தாள் 18, 19-வது வரிகளில் "மகா நவமி என்ற சரசுவதி பூஜை விரதம்" என்று எழுதியிருக்கிறார். எத்தனை நாளைக்குத்தான் உலகத்தை ஏமாற்ற முடியும் ?

நவராத்திரி விழாவில் கோவில்களிலும் புஸ்தகங்களில் ஆவாகித்து நவராத்திரி பூசை செய்யப்படுகிறது என்று நமது சாத்திரியார் எழுதுவது அவர் கோவிலுக்குப் போகும் வழக்கமில்லாதவர் என்பதைக் காட்டுகிறது. ஏனெனில் அவர் எந்தக் கோவிலுக்காவது நவராத்திரியில் போயிருந்தால் தாம் கூறுவது தவறு என்பது அவருக்குத் தெரியாமலிராது. இதனால் சாத்திரியார் கூறுவனவெல்லாம் முன்னுக்குப் பின் முரணும் பொருந்தாப் போலியுரைகள் என்பதும், அவருடைய கூற்றுப் படியே நவராத்திரியில் கடைசி நாளாகிய மகா நவமிக்குத் தசமியின் சேர்க்கை கூடாதென்பதும், அட்டமி (யோகம் - சேர்க்கை) சேர்க்கைதான் தலை சிறந்ததென்பதும், அதனால் 14உ செவ்வா

யன்றுதான் அட்டமியோடு கூடிய நவமி மகா நவமி சரசுவதி பூசை என்பதும், 15உ புதனன்று நவமி தசமிச் சேர்க்கையால் விலக்கப்படுவதால் அன்று மகா நவமி அன்று என்பதும் பெறப் பெற்றன.

சாத்திரியார், "நவமி திதியானது முதல் நாளில் அதாவது அஷ்டமியுடன் சேர்ந்த நவமியில், மறுநாளில் தசமியுடன் சேர்ந்த நவமியில் எதிலும் பூஜைக்கு உரியதே" என்று எழுதி யிருக்கிறார். இப்படி எழுதுகிறவர் அட்டமியுடன்கூடிய நவமி யில் 14உயன்று பூசை கூடாது என்பதோடு தம்பஞ்சாங்கப்படி 15உதான் சரசுவதி பூசை என்று ஏன் எழுதுகிறார்? இதனை அறிஞர் சிந்தித்து உண்மை தெளிவாராக. மேலும் சாத்திரி யார் "உத்திராட நக்ஷத்திரத்துடன் கூடிய நவமியில் அல்லது ஷை நக்ஷத்திரம் சேராத நவமியில் சரஸ்வதி பூஜை செய்யத் தகுந்தது என்று சொல்லியிருக்கிறபடி நாளதுமீ 15உ நவமி யானது உத்திராடத்துடன்கூடி பூஜைகளுக்கு முக்கிய கால மான மத்தியான்ன காலத்திலும் இருக்கிறது. இவ்விவரம் விரத சூடாமணி முதலிய கிரந்தங்களில் நவமி நிர்ணயத்தில் ஆசுவீஜ சுக்ல நவமி பிரகரணத்தில் தெளிவாய்க் கூறப்பட் டிருக்கிறது." என்று எழுதுகிறார். இதனால் உத்திராட நக்ஷத் திரம் பிரதானமில்லை நவமியே பிரதானம் என்பதுதான் விளங்கு கிறதேயொழிய விரத சூடாமணியில் உத்திராட நக்ஷத்திரத் துடன் கூடிய நவமிக்குச் சிறப்புக் கூறியதாகாதே. 'விரத சூடாமணியில் நவமி உத்திராடத்துடன் கூடியும் இருக்கலாம், கூடாமலும் இருக்கலாம் என்று கூறிய இடத்தைக் காட்டிய சாத்திரியார் கண்ணுக்கு அந்தநூலில் இன்ன நக்ஷத்திரத்துடன் கூடிய நவமிதான் சிறந்தது என்று கூறிய இடம் ஏன் புலனாக வில்லை? விரத சூடாமணியில்,

"மூலேத்வாவாகயேத் தேவீம் பூர்வாஷாடாஸு பூஜனம்."

(மூலத்தில் ஆவாகனம் செய்து பூராடத்தில் பூசைசெய்க) என்ற விதி காணப்படுகிறது. "பூர்வாஷாடாஸு பூஜனம்" என்றதனாலே பூராடத்தில் பூசை செய்யவேண்டும் என்பதே அவ்விதி. இதனை உலகத்தாருக்கு எடுத்துக் காட்டிப் பூராடத்

தில் அதாவது 14௳ செவ்வாயன்று மகா நவமி பூஜை என்று எழுதியிருப்பாரானால் நமது சாத்திரியார் உலகத்தாருக்கு நன்மை நாடியவருமாவார்! உண்மைவாதியுமாவார்!! இதனை விடுத்து உலகத்தாருக்குத் தப்பு வழி காட்டுவது முறையன்று. ஈரோடு ஜில்லா ரிஜிஸ்திராராக இருக்கும் திரு. தி. சு. விசுவநாத சிரௌதிகள் B. A., கும்பகோணம் ஸ்ரீ சங்கராசாரியசுவாமிகள் மடத்துக்குப் பஞ்சாங்கம் கணித்து வெளிப்படுத்துகின்ருர். அவர் நிகழும் பிரமோதூத வருஷப் பஞ்சாங்கம் பக்கம் 31-ல் "சரஸ்வதி பூஜை" என்ற குறிப்பில், "இதை இவ்வருஷம் 16௳ புதன்கிழமையிலும் கொள்பவர்கள் சிலர் உண்டு. ஆனால் பூர்வாஷாடாஸம்பூஜனம் என்ற விதியின்படி 15௳ செவ்வாய்க் கிழமையில் குறிக்கப்பட்டது" என்று எழுதியிருக்கிருர். (இவர் பஞ்சாங்கத்தில் 14௳ 15௳ என்றும், 15௳ 16௳ என்றும் மாறி இருப்பது கணித வேறுபாடு. கிழமைகள் ஒன்றே.) இதனாலும் நமது சாத்திரியார் கூறுகிறபடி 15௳ புதன்கிழமை மகா நவமி என்பது முற்றிலும் பிழைபடுகின்றமை காண்க. 14௳ செவ்வாய்க்கிழமையே உத்திராடத்தோடும் அட்டமியோடும் கூடிய மகா நவமி சரசுவதி பூஜை என்பது வெளிப்படை.

அமாவாசையுடன் கூடிய பிரதமையன்று நவராத்திரிகூடாதென்பதற்கு நமது சாத்திரியார் சாத்திரப் பிரமாணங்கள் ஒன்றேனும் காட்டாமல் புராணப் பிரமாணங்கள் இரண்டொன்று காட்டுகிருர். ஆனால் அவர் வாதுளாகமத்தில்,

"குஹூயுக்தா ஸதாத்யாஜ்யா நாசயேச்ச குலம்யதா:"

என்று கூறுகிற பிரமாணம் அறிஞரால் கவனிக்கத்தகுந்ததே. சாத்திரியார் இவ்வசனம் வாதுளாகமத்தில் எந்த இடத்தில் கூறப்படுகிறதென்று ஏன் காட்டவில்லை? இவ்வசனம் மகா சிவ ராத்திரி நிர்ணயப் படலத்தில்தான் கூறப்பட்டிருக்கிறது. மகா சிவராத்திரிக்குக் கூறிய இவ்விதியை நவராத்திரிக்குக் கூறுவது அழகாகுமா? பொருந்துமா? அறிஞர் ஒப்புவரா? இவ்வாறு பிழைபட எழுதுவதைப்பற்றி உலகத்தார் என்ன நினைப்பர்?

"பகல் நாழிகை 12க்குள் எவ்வளவு காலம் அஷ்டமியிருக்

தாலும் அக்காலத்தில்தான் அஷ்டமியுடன் கூடிய நவமி சரஸ்வதி பூஜைக்கு விசேஷமென்று ஏற்படும்" என்று சாத்திரியார் எழுதுகிறார். இவ்விதியை இவர் எங்கே கண்டார்? இதனை உண்மையாக ஏற்றுக் கொண்டாலும் 15உ புதன்கிழமை சரசுவதி பூசை அன்று என்பது பெறப்படுமல்லவா? ஏனெனில் 15உ புதன் கிழமை அட்டமியே இல்லை. 14உ செவ்வாயன்று பன்னிரண்டு நாழிகைக்குள் மட்டுமே நில்லாமல் பதினேழு நாழிகையின் மேலும் அட்டமியிருந்து அதன் மேல் நவமி தொடங்கித் தேவி பூசாகாலமாகிய சாயான்னத்திலும் இரவு முழுவதிலும் இருக்கிறது. ஆதலின் அவர் கூற்றுப்படியே அன்று தான் மகா நவமியாகிறது.

"பிரதமை முதல் ஒன்பது நாள் நவராத்திரியைக் கணக்கிடவேண்டுமே தவிர நவமி ஒன்பதாவது நாளாக இருக்க வேண்டுமென்பது எந்த சாஸ்திரத்திலும் சொல்லப்படவில்லை" என்று சாஸ்திரியார் எழுதுகிறார். உலகத்தில் பெரும் பகுதியினர் ஒன்பதாவது நாளாகிய மகா நவமியைத் தான் சிறப்பாகக் கொண்டாடுகிறார்களே ஒழிய பிரதமை முதலிய திதிகளைக் கொண்டாடுவதில்லை. நவமிதான் மகா நவமி என்னப் படுகிறதே ஒழிய பிரதமை மகா பிரதமை என்று எவ்விடத்தும் கொண்டாடப் பெறவில்லை. ஏனெனில் நவராத்திரியில் நவமியே முக்கியம். மேலும் பிரதமைதான் முக்கியம் என்று சொல்லுகிற சாத்திரியார் தமது சுக்கில, சித்தார்த்தி, காளத்தி முதலிய ஆண்டுகளில் துதியையன்று நவராத்திரி ஆரம்பம் என்றும், நள, ராக்ஷச விசுவாவசு, பிலவங்க முதலிய ஆண்டுகளில் அமாவாசையன்று நவராத்திரி ஆரம்பம் என்றும் எழுதியிருக்கிறார். மேலும் அவருடைய தந்தையாகிய திரு. இராமலிங்க ஜோஸ்யர் விளம்பி, சோபகிருது முதலிய ஆண்டுகளில் அமாவாசையன்றே ஆரம்பம் குறித்திருக்கிறார். இங்ஙனமாகவும் நமது வெங்கடகுருநாத சாத்திரியார் தமது தந்தையும் தாமும் அமாவாசையிலும் துதியையிலும்கூட நவராத்திரி ஆரம்பம் குறித்து வந்த வழக்கத்திற்கு மாறாக இப்போது பிரதமையன்றுதான் ஆரம்பம் என்று எழுதியது என்ன கருதியோ?

மாத்வாச்சாரியாருடைய கால மாத்வத்தில் மேற்கோளாகப் பைடீனச முனிவர் வசனமாக வருகிறது பின் வருவது:

"பஞ்சமீ சப்தமீசைவ தசமீச திரயோதசி
பிரதிபந் நவமீசைவ கர்த்தவ்யா சன்முகாதிதிஃ

இதன் பொருள்: "பிரதமை, பஞ்சமி, சப்தமி, நவமி, தசமி, திரயோதசி யாகிய திதிகள் சூரியாத்தமான சமயத்தில் இருக்கும், அன்றுதான் கொள்ளப்படும்." என்பது. இது போது விதி. இவ்விதி மகா நவமி, விசயதசமி, திரயோதசி (பிரதோஷம்) முதலிய சிறப்புக்கள் கொண்டாடப்படுவதைத் தீர்மானிக்கப் பயன்படும். இதனை அறியாது, "இது நவராத்திரி கூறும் இடத்தில் கூறப்படவில்லை. அதனால் இது இங்கே எடுத்துக் காட்டத்தகாதது" என்று சாத்திரியார் மொழிவது அறிஞர் ஒப்புமாறில்லை. திரயோதசியின் மாலைப்போது எவ்வாறு பிரதோஷத்திற்குத் தீர்மானிக்கப் பெறுகிறதோ அவ்வாறே மகா நவமி விசயதசமிகளுக்கும் மாலைப்போதே வேண்டும் என்பதை இவ்விதி நிலை நாட்டுகிறது.

"பூசைக்குரிய காலம் மத்தியான்னகாலம். ஆதலின் நவமி மத்தியான்னகாலத்தில் இருக்கவேண்டும்" என்று சிலர் கூறுகின்றனர். அதனையே சாத்திரியாரும் கூறுகின்றார். நவராத்திரி என்பதனாலேயே இரவிலேதான் நவராத்திரி பூசை என்பதைச் சிறுவரும் உணர்வரேனும் சாத்திரங்கள் இதுபற்றி என்ன கூறுகின்றது என்பதை ஆராய்வோம்.

பூசைக்குரிய காலம் பொதுவாக மத்தியான்னம் என்று கொண்டாலும் இன்னின்ன பூசைக்கு இன்னின்ன காலம் உரியது எனச் சிறப்பு விதி இருக்கிறது. மகா சிவராத்திரி பூசையைப் பகலில் செய்வாருளரோ? மகா சிவராத்திரி சிவபெருமானுக்கு உரியது போல நவராத்திரி தேவியாகிய சிவசக்திக்கு உரியது. உலக நாயகராகிய பொன்னம்பலவனரை மார்கழி மாதத் திருவாதிரை என்னப் பெறும் ஆருத்ரா தரிசன காலத்திலும் ஆனித் திருமஞ்சனத்திலும் விடியுமுன் பூசிக்கும் கண்காட்சி உலகறிந்ததே. மேலும் கன்ம நூல்கள் சிவசக்திக்குரிய

காலம் சாயான்னமாகிய மாலை வேளை என்று கூறுகின்றன. கன்ம நூல்களும் சோதிட நூல்களும் இரவிற் கதிபதி சந்திரன், சந்திரனுக் கதிதெய்வம் சிவசத்தி என்று கூறுகின்றன. ஆதலின் சிவசத்தி பூசையாகிய நவராத்திரி பூசை மாலைப் போதிலிருந்து இரவிலும் வியாபித்திருக்கும் நவமி முதலிய திதிகளிலேயே செய்தற் குரியது. சத்தி பூசை செய்யும் பெரியார் பௌர்ணமியில் சத்தியை இரவிலேயே பூசனை செய்யக் காண்கின்றோமல்லவா? நிர்ணய சிந்து பின்வருமாறு நவராத்திரியைப் பற்றிக் கூறுகிறது.

"ஆஸ்வீநமாசி மேகாந்தே பிரதிபத்யாதி திர்பவேத்
தஸ்யாம் நக்தம் பிரகுர்வீத ராத்ரௌ தேவீஞ்ச பூஜயேத்
ராத்ரி ரூபாயதோ தேவி திவாரூபொ மகேஸ்வர:
ராத்ரிவிரதமிதம் தேவி சர்வபாப பிரநாசனம்
சர்வகாமபிரதம்நிருணும் சர்வசத்ரு நிபர்ஹணம்
ராத்ரிவிரதமிதம்தஸ்யா ராத்ரௌகர்த்தவ்ய தேஷ்யதே
நக்தவ்ரதமிதம் யஸ்மா தந்யதா நரகேகதி:"

இதனால் சாயான்ன முதல் இராத்திரி வரையும் சத்திகட்குரிய கால மென்பதும், இராத்திரி சத்தி ரூபம், பகல் சிவரூபமாக இருத்தலின் இரவிலேயே சத்தி பூசை செய்தல் வேண்டும் எனபதும், அங்ஙனம் செய்யின் சகலபாவங்களும் நீங்கிச் சகல சத்துருக்களும் நாசமாய் விரும்பியதெல்லாம் கைகூடு மென்பதும், சாயான்னத்தையும் இராத்திரியையும் நீக்கிச் செய்வாராயின் நரகத்தை அடைவர் என்பதும் விளங்குகின்றன. இதைப்போலவே ஸ்காந்தத்திலும்,

"மாஸீசாஸ்வயிதே சுக்லே நவராத்ரி விசேஷத:
ஸம்பூஜ்ய நவதுர்க்காஞ்ச நக்தம்குர்யாத் சமாஹித:
நவராத்ராபிதம்கர்ம நக்தவிரத மிதம் ஸ்மிருதம்"

என்று கூறப்பட்டுள்ளது. இதனாலும் நவராத்ரி என்பது இரவிற் கொள்ளவேண்டிய விரதமென்பதே நிலை பெறுகிறது.

விசய தசமியும் மாலைப் போதில் தசமி இருக்கும் அன்றே என்று முன் பொது விதி வசனத்தில் கண்டோம். இதுபற்றி விரத சூடாமணிச் சிந்தாமணி

"ஆஸ்வீநஸ்ய ஸிதேபக்ஷே தசம்யாந்தாரகோதயே
சகாலோ விஜயோநாம சர்வகார்யார்த்தசாதக:" என்றும்,

இரத்நகோசம்

"ஈஷத் சந்த்யாதிக்ராந்த: கிஞ்சிதுத்பிந்நதாரக:
விஜயோ நாம காலோயம் சர்வகார்யார்த்தசாதக:" என்றும்,

ஸ்காந்தம்

"நவமீசேஷ சம்யுக்தா தசம்யாமபராஜிதா
ததாதிவிஜயந்தே விபூஜிதா ஜயவர்த்தநீ
ஆஸ்வீநே சுக்லபக்ஷேது தசம்யாம் பூஜயந்நர:
ஏகாதஸ்யாம் நகுர்வீத பூஜநஞ்சாபராஜிதம்."

மேலே கண்ட பிரமாணங்களினால் நக்ஷத்திரங்கள் தோன்றும் மாலைப்போதில் தசமியிருக்கும் வேளையே விசயதசமி என்றும், நவமிக்கு மேல் வரும் தசமியே சிறந்ததென்றும், தசமிக்கு மேல் வரும் ஏகாதசி விலக்கப்படுமென்றும் அறியலாம். விரதராஜமும் நக்ஷத்திரோதய காலத்தையே விஜயயோக காலம் என்றும், அக்காலத்திலே தசமிக்குச்சம்பந்தம் இன்றியமையாததென்றும், இராமனும் அருச்சுனனும் அபராஜிதையைப் பூசித்து அவ் விசயயோக காலத்திலே விசய யாத்திரை புறப்பட்டார்கள் என்றும் கூறுகின்றது.

மேலே காட்டப் பெற்ற பிரபல காரணங்களினாலே நிகழும் பிரமோதூத ஆண்டில் நவராத்திரி ஆரம்பம் புரட்டாசியீ 6௳ திங்கட்கிழமையே (அன்றுதான் பிரதமை இரவில் இருக்கிறது) என்றும், 14௳ செவ்வாயன்று அஷ்டமியின் மேல் நவமி பூராடத்தோடு சம்பந்தப்பட்டு மாலைப் போதிலும் இரவிலும் வியாபித்திருத்தலினாலே அன்றுதான் மகா நவமி சரசுவதி பூசை என்றும், 15௳ புதனன்று நவமியின் மேல்தொடங்கி தசமி நக்ஷத்திரோதய காலமாகிய விசயயோக காலத்திலே இருக்கிறபடியால், விசயயாத்திரைக்குரிய விசயதசமி அன்றே என்றும் நாம் தெளிவாக அறிகிறோம்.

திருநெல்வேலி ஆலயத்தில் தருமகர்த்தர்கள் உண்மை இதுவெனத் தெளிந்து திருவிழாக்களை நடத்துவது நமது வெங்கட

குருநாத சாத்திரியாருக்குக் கட்சிக்காக நடத்துகிறார்களென்று தெரிகிறது. மேலே கண்ட ஆராய்ச்சியினால் உண்மைக்கு மாறாக வீண் கட்சிகளை இழுத்துக் கொண்டு பிடிவாதமாகத் தப்பிதமான காலங்களில் உத்தமமான விரதங்களைக் குறித்து துராக்ஷேபனை செய்து பொருளற்ற வெற்றுரைகள் நிரம்பிய துண்டுத்தாள்கள் வெளிப்படுத்துபவர் நமது சாத்திரியாரே என்பதை இனியாவது உலகத்தார்கள் தெரிந்து கொள்ளாமல் இரார்.

உண்மையைப் பொய்ம்மையால் மறைத்து வைத்தபோதிலும் அதனால் சில காலம் உண்மை மறைந்திருந்தாலும், உண்மை பொய்ம்மையை மிதித்துத் தள்ளி வெளிப்பட்டு உலகத்தார் முன்நிற்கும் என்பது கடவுள் ஆணை. உண்மைக்கு அழிவே கிடையாது.

குறிப்பு:-நவராத்திரி விழா இரவிலேயே நடைபெற வேண்டுமென்பதற்கு கீழே ஆகமப் பிரமாணங்கள் காண்க. அவை தேவகோட்டை சிவாகம சித்தாந்த பரிபாலன சங்கத்தாரால் அனுப்பி யுதவப் பெற்றவை.

பூர்வகாரணாகமம் 598 வது பக்கம்:—

“தூபதீபோப சாரைஸ்ச மந்திர புஷ்பைஸ்ச தாபயேத் இஷ்டகாம்யார்த்த சித்யர்த்தம் ஜநாந்சர் வாந் பிரதர்சயேத் ஹோமகார்யம் துவி காலஞ்ச ராத்திரியாஞ் சோத்சவம் ஆசரேத்.” (தூபதீப உபசாரங்களும் மந்திர புஷ்பங்களும் கொடுத்து தங்களுடைய விருப்பம் கைகூடுகிறதற்காக எல்லா ஜனங்களுக்கும் காண்பிக்க வேண்டியது. இரண்டு காலங்களிலும் ஓமம் பண்ணுக. இரவில் உற்சவம் செய்க.)

பூர்வகாரணாகமம் 599-வது பக்கம்:—

“பிரதிபத் ராத்திரி மாரப்ய பூஜயேத் சர்வசக்திகா:” (பிரதமையின் இரவு முதற்கொண்டு சர்வ சக்திகளையும் பூசிக்க வேண்டும்.)

இ. மு. சுப்பிரமணிய பிள்ளை,
சைவப் பஞ்சாங்க கணிதர்.

20—10—30.

சிவஞான போதக்கருத்து

இரண்டாவது சூத்திரம்

முதலாவது அதிகாரணம்.

(திரு. M. V. நெல்லையப்ப பிள்ளையவர்கள் B. A.)

(௫௯௬-ம் பக்கத் தொடர்ச்சி)

35. ஆசிரியர் அத்துவித இலக்கணங் கூறுமாற்றால் முதல் அதிகரண மேற்கோளை எவ்வாறு வலியுறுத்துகின்றார் என்ற ஐயம் இதனை யோதுகின்ற சிலருடைய உள்ளத்தில் ஒருவேளை நிகழலாம். அத்துவிதம் என்பது முதல்வனுக்கும் உயிர்களுக்கும் அநாதியேயுள்ள பிரிக்க முடியாத கலப்பினால் உள்ளதாகிய வேற்றுமையில்லாத தொடர்பு. இந்த அத்துவிதத் தொடர்பு பற்றியே, உயிர்கள் பொருட்டு ஐந்தொழிலைச் செய்தல் முதல்வனுக்குக் கடனாய் அமைதலன்றி, அஃது அவனுக்கு இலக்கணமுமாகின்றது. உலகின்கண் சிற்றறிவுடைய தந்தை ஒருவனுக்குத்தன் மகனிடத்துள்ள உடற்றொடர்பு பற்றியன்றோ? அம் மகன் உலகில் நன்கு வாழும் வண்ணம் கல்வி பயிற்றுவித்தல் முதலிய உதவிகளைச் செய்தல் கடனாகின்றது. அவ்வாறாயின், அநாதியே மலமின்மையும் முற்றறிவும் பேரருட்டிறனுமுடைய முதல்வனுக்குத் தன் இனமாகிய அநாதியே மலக்கட்டுடைய உயிர்களுக்கு அவர்களுடைய மலத்தை நீக்கித் தன்னைப்போல் எப்பொழுதும் நிலையான பேரின்பம் அடையச் செய்தற்குத் தன் கடனாக ஐந்தொழிலை இயற்றுதல் அவர்களிடத்துத் தனக்கு அநாதியேயுள்ள அத்துவிதத் தொடர்புபற்றியென்பது கூறவும் வேண்டுமா ?

36. அத்துவித இலக்கணம் முதலதிகரண மேற்கோளினது உண்மையை வலியுறுத்துதல் ஒக்கும் ; ஆயினும், முதலதிகரண மேற்கோளுண்மையை நேரே கூறாது அத்துவித இலக்கணத்தோடு தொடர்பு படுத்தியதுமல்லாமல், அதனை முதன்மையாக வைத்து ஆசிரியர் கூறுதல் எற்றுக்கு எனின் ; கூறு

தும். முதலாவது சூத்திரத்தில், உலகில் முத்தொழில் நிகழ்ச்சி காணப்படுகையில் அவைகளை இயற்றுதற்கு ஒரு நிமித்த காரணனை முழுமுதற் கடவுளது உண்மை கூறப்பட்டது. இரண்டாவது சூத்திரத்தில், அந்த நிமித்த காரணனாகிய முதல்வன் அந்த முத்தொழில்களில் அடங்கியுள்ள ஐந்தொழில்களையும் முதற் காரணமாகிய மாயையைக் கொண்டும் துணைக்காரணமாகிய அருள் வலியைக்கொண்டும் செய்கின்றான் என்று ஆசிரியர் கூறுங்கால், அந்த ஐந்தொழில்களையும் முதல்வன் மேலே கூறியவாறு அத்துவிதத் தொடர்புபற்றிச் செய்கின்றான் என்று கூறுதல் முறைமையாகின்றது. "சிவஞான போத நூலின் கருத்து என்ன? சுருங்கக் கூறுக" என்று ஒருவன் கேட்பின், "முன் ஆறு சூத்திரத்தில் அத்துவிதப் பொது இலக்கணமும் பின் ஆறு சூத்திரத்தில் அத்துவிதச் சிறப்பு இலக்கணமும் கூறுதல்" என்று நாம் விடை கூறும்படியாய் அத்துவித இலக்கணம் இந்நூலுக்கு அத்துணை முதன்மையாயுள்ளது. பிந்திய ஆறு சூத்திரத்திற் கூறப்படும் அத்துவிதச் சிறப்பு இலக்கண அறிவும், அவ்வறிவின்வழி ஒழுகலாறுமே வீட்டின்பம் அடையச் செய்வனவாகும். அத்தகைய அத்துவிதச் சிறப்பு இலக்கணத்தை அறிதற்குமுன், அத்துவிதப் பொது இலக்கண அறிவு இன்றியமையாது வேண்டப்படுவது. எந்த உண்மையையும் அதன் பொது இலக்கணம் அறிந்து பின் அதன் சிறப்பிலக்கணத்தை அறிதல் அறியும் முறைமையாகலின், அத்துவிதப் பொது இலக்கணத்தை ஆசிரியர் மாணுக்கருக்கு இரண்டாவது சூத்திரத்தில் உணர்த்துதல் கடனாகின்றது. இரண்டாவது சூத்திரத்தில் அத்துவிதப் பொது இலக்கணம் அடிப்படையாகக் கூறப்படாவிடின், ஐந்தாவது சூத்திரத்தில் கட்டுக்களினது (பாசங்களினது) இலக்கணங் கூறுமாற்றால் முதல்வன் மக்களுயிர்களுக்கு அவர்கள் அறியாது அருளினுற் செய்யும் 'காட்டும் உதவி' முறைமை அறிவும், எட்டாவது சூத்திரத்திற் கூறுகிறபடி முதல்வன் உயிர்களுக்கு மானுட வடிவில் குருவாய் வந்து உணர்த்தும் உண்மையைக் கேட்டு அறியும் கேள்வி அறிவும், ஒன்பதாவது சூத்திரத்திற் கூறுகிறபடி கேட்ட உண்

மையை எண்ணும் (சிந்திக்கும்) அறிவும், பத்தாவது சூத்திரத்திற் கூறுகிறபடி கேட்டு எண்ணிய உண்மையைத் தெளியும் தெளிவு அறிவும், (Intuitional wisdom) பதினோராவது சூத்திரத்திற் கூறுகிறபடி கேட்டு எண்ணித் தெளிந்த அறிவை நிட்டை செய்து அறியும் நிட்டை அறிவும், மாணாக்கருக்கு ஒன்றின் பின் ஒன்றாய் நிகழ்ந்து முடிவில் வீட்டின்பம் அடைதல் கூடாதாம். ஆதலின், ஆசிரியர் இரண்டாவது சூத்திரத்தில் அத்துவிதப் பொது இலக்கணத்தை முதன்மையாக வைத்துக் கூறினார் என்க.

37. வேதத்தில் அத்துவித இலக்கணம் கூறப்பட்டிருக்கின்றது. வேதத்தில் அத்துவித இலக்கணங் கூறப்படும் சில வசனங்கள் உள. ஒற்றுமைக் கொள்கையர்களாகிய ஸ்மார்த்தர்களும் வேற்றுமைக் கொள்கையர்களாகிய மாத்துவர்களும் வேற்றுமை ஒற்றுமைக் கொள்கையர்களாகிய வைணவர்களும், மேலே 33-வது பகுதியிற் கூறியபடி, தாங்கள் தாங்கள் முறையே கூறுகின்ற ஒன்றாய் நிற்கும் நிலை, வேறாய் நிற்கும் நிலை உடனாய் நிற்கும் நிலை ஆகிய இந்த நிலைகளை அந்த வேத வசனங்களைப் பிரமாணமாகக்கொண்டு கூறுகின்றார்கள். அவர்களுடைய ஆசிரியர்களாகியசங்கராச்சாரியார், மாத்துவாச்சாரியார், இராமானுஜாச்சாரியார் மூவர்களும் வேதத்தைச் சார்ந்த ஈஸாவாஸிய உபநிடதம் முதலிய பத்து உபநிடதங்களுக்கும், வியாச முனிவரால் இயற்றப்பட்ட பிரம சூத்திரத்துக்கும், கிருஷ்ணன் அர்ச்சுனற்கு உணர்த்தின பகவத்கீதைக்கும் தாங்கள் தாங்கள் கூறுகிற அத்துவிதக் கொள்கையின் சார்பாகவே உரை செய்திருக்கின்றார்கள்.

38. நூலாசிரியர் மூன்று கொள்கையர்களுடைய கொள்கைகளையுட் மறுத்து வேதத்தில் அத்துவிதம் கூறுகிற வசனங்களின் பொருளும் அத்துவிதம் என்ற வடமொழிச்சொல்லினது பொருளும் தாம் எடுத்துக்கொண்ட முதல் அதிகரண மேற்கோளினது உண்மையை நிறுவுகின்றன என்று கூறுகின்றார். அவர் அத்துவித இலக்கணங் கூறுகிற வேத வசனங்களைக்

குறிப்பிட்டு, எடுத்துக் காட்டு வெண்பாக்களில், (உதாரண வெண்பாக்களில்)

"ஒன்றென்ற தொன்றேகாண் ஒன்றே பதி" என்றும், "அத்துவிதமாத லருமறைகளொன்றென்று தத்துவிதம் என்றறையுமாங்கு" என்றும் கூறுகின்றார்.

39. முதலாவது, ஆசிரியர் கூறுகிறபடி அத்துவிதம் என்ற வடமொழிச் சொல்லாற் பெறப்படும் பொருளைக் கருதுவாம். அத்விதீயம் (𑌅𑌦𑍍𑌵𑌿𑌤𑍀𑌯𑌂) அத்வைதம் (𑌅𑌦𑍍𑌵𑍈𑌤𑌂) என்ற வடமொழிச் சொற்கள் சிதைந்து தமிழில் அத்துவிதம் என வந்திருக்கிறது. 'துவிதீய:' (𑌦𑍍𑌵𑌿𑌤𑍀𑌯𑌃) என்ற வடமொழிச் சொல் இரண்டு (two) என்ற எண்ணைக் குறிக்கிறது. அதிலிருந்து வருகிற துவிதீயம் (𑌦𑍍𑌵𑌿𑌤𑍀𑌯𑌂) என்ற சொல் இரண்டாவது (second) என்று பொருள் படுகிறது. (𑌦𑍍𑌵𑌿𑌤𑍀𑌯𑌂) துவிதீயம் என்ற சொல் இரண்டாவதான பொருளைக் குறிக்கும். இந்த துவிதீயம் (𑌦𑍍𑌵𑌿𑌤𑍀𑌯𑌂) என்ற சொல்லுக்கு முன் 𑌨 (உயிர் மெய்) என்ற உபசர்க்கம் (முன்னடை prefix) வந்து அப்படிச் சேரும்பொழுது வடமொழி இலக்கண முறைப்படி நகர ஒற்றுக் கெட்டு அத்விதீயம் (𑌅𑌦𑍍𑌵𑌿𑌤𑍀𑌯𑌂) என வந்திருக்கிறது. அத்வைதம் (𑌅𑌦𑍍𑌵𑍈𑌤𑌂) என்ற சொல்லும் இவ்வாறே வந்திருக்கிறது. இந்த அத்விதீயம் (𑌅𑌦𑍍𑌵𑌿𑌤𑍀𑌯𑌂) அல்லது அத்வைதம் (𑌅𑌦𑍍𑌵𑍈𑌤𑌂) என்ற சொல்லே தமிழில் அத்துவிதம் என வந்திருக்கிறது. இந்த நகர உயிர் மெய்யில் நகர ஒற்றுக் கெட்டு எஞ்சி நின்ற அகரமானது வடமொழி வழக்கின்கண் அன்மை, இன்மை, மறுதலை என்னும் மூன்று பொருள்களை உணர்த்துகின்றது. எடுத்துக் காட்டாக அப்பிராமணன் என்ற வடமொழிச்சொல் பிராமணச் சாதியிலே பிறந்திருந்தும் பிராமணத் தன்மை உடையவன் அல்லாதவனை உணர்த்தும். அது ஏனைய சாதியிலுள்ள ஒருவனை உணர்த்தாது. இவ்வாறு அப்பிராமணன் என்ற சொல்லில் முன் நிற்கிற அகரம் அன்மைப் பொருளை உணர்த்துகின்றது. அமலம் என்ற சொல் மலம் இன்மையைக் குறித்தலால் அதிலுள்ள அகரம் இன்மைப்பொருளை உணர்த்து

கின்றது. அநீதி என்ற சொல் நீதிக்கு மறுதலையை (எதிரிடையை)க் குறித்தலால் அதிலுள்ள அகரம் மறுதலைப் பொருளை உணர்த்துகின்றது. இன்மைப் பொருளுக்கும் அன்மைப் பொருளுக்கும் சிறிது வேறுபாடு உண்டு. கேள்வி கேட்கிறவன் ஒருவன் வேறொருவனைப் பார்த்து மேசைமேலே கண்ணாடியிருக்கிறதா வென்று கேட்டபொழுது அவன் கண்ணாடி இல்லை என்று கூறுதல் இன்மைப் பொருள் ஆகும். (Negation of what is asked by the questioner) இந்த இடத்தில் கேள்வி கேட்கிறவனுக்கு மேசைமேல் பொருளிருப்பதும் இல்லாதிருப்பதும தெரியாது. மேசைமேல் பொருளிருத்தலை அறிந்த ஒருவன் மேசையினருகே நிற்கும் வேறொருவனைப் பார்த்து மேசைமேலிருப்பது கண்ணாடியா வென்று கேட்டபொழுது விடை கூறுகிறவன் அல்ல அதாவது மேசைமேலிருக்கும் பொருள் கண்ணாடி அல்ல, கத்தி (The object is not glass which is different from "There is no glass" in the other case) என்று கூறுதல் அன்மைப் பொருளாகும். இந்த இடத்தில் கேள்வி கேட்கிறவனுக்கு மேசைமேல் பொருளிருப்பது தெரியும். ஆனால் அஃது இன்ன பொருளென்று தெரியாது.

40. இவ்வாறு அகரம் அன்மை இன்மை மறுதலை என்னும் மூன்று பொருள்களை உணர்த்தும் என்னும் வடமொழி இலக்கண வழக்கிற்கு ஒரு விலக்கு (exception) உளது: அவ் விலக்கு எதுவெனின் எண்ணுப் பெயர் முன்வந்த அகரம் அன்மைப் பொருள் ஒன்றனையே உணர்த்துமன்றி பெயர்ப் பொருள்கள் முன்வந்த அகரம்போல ஏனைய இன்மை மறுதலைப் பொருள்களை உணர்த்தாது என்பதாகும். ஏகம் (ஏகம்) துவிதீயம் (த்விதீயம்) என்ற இரண்டு எண்ணுப் பெயர்களின் முன்தான் 'அ' என்ற உபசர்க்கம் (முன்னடை, Prefix) வருதல் வடமொழி இலக்கண வழக்கிலிருக்கிறது. அநேகம் (அநேகம்) அத்விதீயம் (அத்விதீயம்) அல்லது அத்வைதம் (அத்வைதம்) என்ற சொற்களன்றித் திருதீயம் த்ருதீயம் (Third) சதுர்த்தம் (சதுர்த்தம் Fourth) முதலிய எண்ணுப் பெயர்களின் முன் 'அ' என்ற உபசர்க்கம் சேர்ந்த மொழிகள் வட

மொழியில் இல்லை. அநேக (அநேக) என்ற வடமொழிச் சொல் ஒன்று அல்ல அதாவது பல என்னும் பொருளைக் குறித்தல்போல அத்துவிதம் அத்விதீயம் (அத்விதம் அத்விதீயம்) என்ற சொற்களும் இரண்டு அல்ல என்ற பொருளை மாத்திரம் உணர்த்துகின்றது. அத்துவிதம் என்ற எண்ணுப் பெயர்ச் சொல் இரண்டின்மை இரண்டின் மறுதலைப் பொருள்களை உணர்த்துதல் வடமொழி இலக்கண வழக்கின்கண் இல்லை.

41. மேலே கூறிய வடமொழி இலக்கண வழக்குக்குமாறாக ஸ்மார்த்தர்கள் அகரத்துக்கு இன்மைப் பொருள் கொண்டு அத்துவிதம் என்னும் சொல்லுக்கு இரண்டின்மை அதாவது ஒன்று, எனப் பொருள் கொள்வர். அதுபற்றி அவர்கள் பிரமப் பொருள் ஒன்றே உளதென்றும், அந்த ஒரு பொருளும் குண குணிவேற்றுமை தோன்ற நிற்பின் முற்றிலும் ஒன்றுதலின்மை யால் அத்துவிதம் என்பது உபசாரச் சொல்லாய் முடியுமென் றும், ஆதலின் பிரமப்பொருள் குணம் சத்தி சங்கற்ப முதலிய வற்றால் விசேடிக்கப்படுதலின்றி நிர்விசேடமா யிருக்கும் பொரு ளென்றும் கூறுவர். அவர்கள், இவ்வாறு பிரமப் பொருள், தனியே நிற்பதொரு பரம்பொருளென்று கூறுதலால் கேவ லாத்துவிதிகள் என்று கூறப்படுவர். இன்னும் அவர்கள் சித் தாகிய பிரமப்பொருள் ஒன்றினிடமிருந்தே கயிற்றில் அரவு தோன்றினது போலச் சிற்றறிவு சிறு தொழிலுள்ள பலவாறான உயிர்களும் உயிரில்லாத உலகமும் கற்பிதமாய்த் தோன்றின வென்றுங் கூறுவர். அவர்கள் பிரமப் பொருளும் பசுபாசங் களும் (உயிர் உலகங்களும்) இரண்டில்லை ஒன்றே யெனக் கூறு தலால் ஒற்றுமைக் கொள்கையர் (அபேதவாதிகள்) என்றும், ஏகமாகிய ஆன்மாவைப் பிரமப் பொருள் எனக் கூறுதலால் ஏகான்மவாதிகள் என்றுங்கூறப்படுவர். உலக வழக்கில் அவர் கள் "வேதாந்திகள்" என்றும் அழைக்கப்படுவர். அவர்கள் மேலே கூறிய கொள்கைகளையும் பிற கொள்கைகளையும் கார ணங் கூறி மறுக்கப்புகின் உரை அளவு கடந்து விரியும். மறுப் புரை விரிவாய்க் கூறுதற்கு இது இடமுமல்ல.

42. கேவலாத்துவிதிகளாகிய ஸ்மார்த்தர்கள் ஏகமேவாத்விதியம் (பிரமம்) (ஏகமேவாத்விதீயம் ப்ரஹ்ம) என்ற வேதவசனத்துக்குக் கூறும் பொருளை ஆசிரியர் மறுத்துக் கூறுகிற கருததுக்களை மாத்திரம் இங்கே கூறப்படும். ஸ்மார்த்தர்கள் அந்த வசனத்தில் ஏகம் (ஏகம்) என்ற சொல்லுக்கு ஒன்று என்று பொருள் கொள்ளுதல் போல பின்னே வரும் அத்விதீயம் (அத்விதீயம்) என்ற சொல்லுக்கும் ஒன்று என்றே பொருள் கூறுவர். வடமொழி இலக்கண வழக்குப்படி எண்ணுப் பெயர் முன் வந்த அகரம் அன்மைப் பொருள் உணர்த்துமன்றி இன்மைப் பொருளுணர்த்தாதாதலின் அத்விதீயம் (அத்விதீயம்) என்ற சொல்லுக்கு ஒன்று எனப் பொருள் கொள்ளுதல் சொற் பொருளுணர்ச்சி முறைமைக்கு மாறாயுள்ளது என்றும், அவ்வாறு மாறுகோட்பொருள் கொள்ளினும், இரண்டாவது பொருளின்றி ஒன்றாயிருக்கிற பிரமப்பொருள் தன்னைத்தானே ஒன்று எனக் கூறிக்கொள்ளுதல் வேண்டப்படுவதொன்றில்லையாதலின் பொருத்தமில்லையென்றும் பிரமப்பொருளை ஒன்று என ஒரு வசனத்தில் அடுக்காக இரண்டு இடங்களில் கூறுதல் வேண்டப்படுவதில்லையென்றும் ஆசிரியர் கூறுகின்றார். வேதவசனத்தில் ஏகமேவ (ஏகமேவ) என்னும் சொற்கள் முதல்வன் ஒருவனே என்பதையும் அத்விதீயம் (அத்விதீயம்) என்னும் சொல்லானது அகரம் அன்மைப் பொருள் உணர்த்துதலினால் முதல்வன் உயிர்களின் வேறாய் இரண்டாம் பொருளா யிருந்தாலும் உயிர்களோடு கலப்பினால் **இரண்டற** (பிரிப்பின்றி) நிற்கின்றான் என்பதையும் விளக்குகின்றன என்று அவர் கூறுகின்றார். அப்பிராமணன் என்ற சொல்லானது பிராமணன் அல்லாத ஜாதியானைக் குறியாது பிராமணனாயிருந்தும் பிராமணத்தன்மை உடையன் அல்லாத பிராமணனைக் குறித்தற்போல வேதத்திலுள்ள அத்துவிதம் என்ற சொல்லானது முதல்வன் உயிர்களுக்கு இரண்டாவது பொருளாய் வேறாயிருப்பினும் கலப்பினால் உயிர்களோடு இரண்டறக் கலந்து பிரிப்பின்றி நிற்கின்றான் என்ற பொருளைக் குறிக்கின்றது. உலக வாழ்க்கையிலுங் கூட இரண்டு நண்பர்கள் ஒருவருக்கொருவர் உயிருரிமை நட்புக்கொண்டவர்களா யிருந்தால்

அவர்கள் ஈருடலிலோருயிர் உடையவர்கள்" என்று கூறப்படு தலை நாம் காண்கின்றோம்.

43. இனி, மாத்துவர்கள் அகரத்துக்கு மறுதலைப் (எதிர் மொழி) பொருள் கூறி அத்துவிதம் என்ற சொல்லுக்கு இரண் டின் மறுதலையாகிய ஒன்று எனப் பொருளை கொள்வர். இரண் டின் மறுதலையாகிய ஒன்று கொள்ளுதலினால் இருவேறு பொருள்கள் உண்டென்றும் அநீதியின் மறுதலை கொள்ளவே அதற்கு மறுதலையாகிய நீதியும் கொள்ளக்கிடந்து அவைக ளிரண்டும் வேறு வேறாதல் போல ஒன்றாகிய கடவுளும் இரண் டாவதாகிய உயிர்களும் வேறு வேறு பொருள்களாய் உள்ளன என்றும் அவர்கள் கூறுகின்றார்கள். இன்னும் அவர்கள் உயிர் கள் பலவாறாய் எண்ணில்லாதவைகளாயுள்ள பொருள்கள் என் றும், திருமாலே, மேலான பொருள் (Supreme Being) என் றும் திருமாலும் உயிர்களும் பிரகிருதியும் எப்பொழுதும் வேறு வேறாயிருக்கிற நித்தியப் பொருள்களென்றும் உயிர்களும் பிர கிருதியும் திருமாலுக்கு உட்பட்டவைகளாய் (subordinate) அவ ரைச் சார்ந்திருப்பவைகள் (dependent) என்றும், உயிர்கள் திருமாலுக்குச் செய்யும் உயர்தர அன்பினாலே வீட்டினை அடையும் என்றும் கூறுவர். மாத்துவர்கள் கடவுளும் உயி ரும் எப்பொழுதும் கலந்து சேராமல் வேறு வேறா யிருக்கிற பொருள்களென்றும் உயிர் வீட்டினை அடையும்பொழுது தன் முதற்றன்மை கெடுதலில்லை என்றும் கூறுதலால் அவர்கள் வேற்றுமைக் கொள்கையரென்றும் துவிதிகளென்றும கூறப் படுவர். இவர்கள் கடவுள் உயிர்களோடு கலவாமலும் உயிர் கள் கடவுளோடு கலவாமலும் இருக்கிற வேறு வேறு பொருள் கள் என்று கூறுதலால், அவர்கள் கொள்கையானது கடவு ளுடைய எங்கும் நிறைந்த தன்மை (வியாபகம்)க்கு இழுக்கும் உயிருக்குத் தன்னிடத்தில் கடவுளுடைய நிறைந்த தன்மை யில்லாமல் தனித்து நிற்கும் உரிமை உடைமையும் தந்து நூலறி வோடும் ஆராய்ச்சி அறிவோடும் முரணுகின்றது.

44. இனி, வைணவர்கள் அகரத்துக்கு இன்மைப் பொருள் கொண்டு கடவுள் எங்கும் நிறைந்த பொருள் (வியா

பகப் பொருள்) என்றும் உயிரும் உயிரில்லாத உலகமும், மரமும் கவடும், போலவும் குணியும் குணமும் போலவும் கடவுளின் வேறல்லாத பொருள்களாய் அவரில் அடங்கி நிற்கும் பொருள்கள் என்றும் கடவுளில் அடங்கியுள்ள உயிரும் உயிரில்லாத உலகமும் பலவாறு யிருந்தாலும் கடவுள் பல அல்ல, ஒன்றே எனவும் கூறுவர். வைணவர்கள் கடவுளும் பசுபாசங்களும் (உயிர்களும் கட்டுகளும்) ஒருவகையில் பிரிப்பில்லாத ஒரு பொருள் என்றும் மற்றொரு வகையில் மரமும் கவடும் போல வேறு வேறு பொருள்களென்றும் கூறுதலால் வேற்றுமை ஒற்றுமைக் கொள்கைகள் (பேதாபேத வாதிகள்) என்றும், கடவுள் தன்னோடியைபுடைய பசுபாசங்களாலும் (உயிர்ப் பொருள் உயரில்லாத பொருள்களாலும்) சத்திகுண சங்கற்ப முதலியவற்றாலும் விசேடிக்கப்பட்டு விசிட்டமாய் நிற்கின்றான் எனக் கூறுதலால் விசிட்டாத்து விதிகள் என்றும் கூறப்படுவர். சிவாத்துவித சைவரும் தங்களுக்குக் கடவுள் வேறாயினும் வைணவரைபபோன்ற கொள்கையை உடையவர்கள். வைணவர்கள் உயிருக்கு நிறைந்த தன்மை (வியாபகம்) கூறாமல் அணுபரிமாணமும் தங்கள் கடவுளாகிய திருமாலுக்குப் பரிணாமமும் முழுமுதற்றன்மையும் கூறுதலால் உண்மைக்கு மாறுபட்ட கொள்கைகளை உடையவர்களாகின்றார்கள்.

தென்னிந்திய தமிழ்ச் சங்கம் திருநெல்வேலி

தனித் தமிழ்த் தேர்வுகளின் தேர்ச்சிக் குறிப்பு

தமிழகத்திலுள்ள தமிழ் மக்களில், தமிழினது தொன்மையும் தன்மையும் நன்மையும் நாடி அதனை முறையே பயின்று தேர்ந்து பயனுறக் கருதும அறிஞர்களுக்கு ஆர்வமும் ஊக்கமும் மேம்படுமாறு செய்வான், 1924ல நெல்லையில் ஏற்படுத்தப் பெற்ற **தென்னிந்திய தமிழ்ச் சங்கம்** கடந்த ஐந்தாண்டுகளாகத் தனித் தமிழ்த் தேர்வுகளைக் குறித்த சில ஊர்களில் தக்க அறிஞர் மேற்பார்வையில் நடத்தி வருகின்றது.

இவ் யாண்டு, மேற்படி தேர்வுகள், 1930 ஜூன் 25 26 27 (௲௱௭, ஆனி, ௰௧, ௰௨, ௰௩) புதன், வியாழன், வெள்ளிகளில் திருநெல்வேலி திருவனந்தபுரம் ஆரணி முதலிய நகர்களில் நடைபெற்றன. நிகழ்ச்சியாண்டில் சங்கத்திலேற்பட்டிருக்கும் மூவகைத் தேர்வுகளுக்கும் விண்ணப்பித்தவர்கள் தொகை 18.

தமிழ்த் தேர்வுக்கு விண்ணப்பித்தவர் பன்னிருவர். எழுதியவர் அறுவர். இளந்தமிழ்ப் புலவர் தேர்வுக்கு விண்ணப்பித்தவர் நால்வர். எழுதியவர் இருவர். தமிழ்ப் புலவர் சிறப்புப் பட்டம் பெறுவதற்கு முன்னதாகத் தேறவேண்டிய தமிழ்ப் புலவர் பொதுவுக்கு விண்ணப்பித்தவர் இருவர். எழுதியவர் இருவர். இவர்கள் தேர்ச்சி வகை யடியில் வருமாறு :—

தமிழ்த தேர்வு

இரண்டாம் வகுப்பு

பதிவெண் த. 65. R. வரதையர், பார்வதி அகரம் கிராமம், களம்பூர் P. O. வடஆற்காடு ஜில்லா.

மூன்றாவது வகுப்பு

பதிவெண் த. 66. G. அண்ணாமலை முதலியார், போர்டு பாட சாலை, சேதரம்பட்டு, களம்பூர் P. O. வடஆற்காடு ஜில்லா.

பதிவெண் த. 63. நாராயண ஸ்ரீனிவாசன், காமக்கூர், களம்பூர் P. O. வடஆற்காடு ஜில்லா.

பதிவெண் த. 62. B. சுந்தரேச முதலியார், ஸ்ரீராமர் வீதி, குண்ணத்தூர், ஆரணி, வடஆற்காடு ஜில்லா.

இளந்தமிழ்ப் புலவர்

மூன்றாவது வகுப்பு

பதிவெண் இ. 22. இ. மு. அருணாசலம், சம்பாத் தெரு, தென் காசி, திருநெல்வேலி ஜில்லா.

பதிவெண் இ. 21. நம்பி ரெட்டியார், ஆசிரியர், செந்தமிழ்க் கலாசாலை, திருவனந்தபுரம்.

தமிழ்ப் புலவர் பொது

மூன்றாவது வகுப்பு

பதிவெண் த. பு. பொ. 6. ஐ. நடேச பிள்ளை, தமிழ்ப் பண்டிதர், போர்டு ஹைஸ்கூல், உத்தரமேரூர், செங்கற்பட்டு ஜில்லா.

அறிவிப்பு

இச்சங்கத் தனித் தமிழ்த் தேர்வுப் பாட முறைகள் 1929 ஜூலையில் மாற்றப்பட்டிருந்தும், கிடைத்த குறைந்த காலத்துள் பதினெண்மர் தேர்வுகட்கு விண்ணப்பிக்க முன் வந்தது தமிழ் பயின்று வருபவர்களின் ஆர்வத்தை விளக்குவதாம். தமிழ்நாடு முழுவதுமுள்ள தமிழ்ப்பற்றுளர்கள் தமிழின் வளர்ச்சி கருதித் தமிழ்ப் பயில்வோர்களை ஊக்குவார்களாயின், தமிழகத்தில் செந்

தமிழ்த் தேர்ச்சியுற்ற அறிஞர் கூட்டம் நாளுக்கு நாள் பல்கிப் பெருகி நாட்டிற்கு நலம் பயப்பதாம். இச்சங்கத தேர்வுகட்கு மாணவர்களை யனுப்பியும், தேர்வுகட்கு வினாத்தாள் குறித்தும் விடைத்தாள் நிறுத்தும், தேர்வுகளை ஆங்காங்கு நடத்தியும் ஆனற உதவி புரிந்த பல அறிஞர்கட்கும் இச்சங்கம் நன்றி பெரி தும் உரித்தாகின்றது. சென்னைத் துரைத்தனத்தாரும், பல் கலைக் கழகத்தாரும் இச்சங்கத் தேர்வுகளை மதித்தொப்புதற் கான முயற்சி விரைவிற் செய்யப்பெறும். தமிழ்ச் செல்வர்கள் உதவி பல்வகையானும் வேண்டப்பெறும்.

திருநெல்வேலி
12-10-1930　　　　　　பு. சி. புன்னைவனநாதன்,
அமைச்சர்.

மதிப்புரை

இராமலிங்க அடிகள் வரலாறும் திருவருட்பா ஆராய்ச்சியும்

இந்நூல் திருவாளர் T. S. பாலசுந்தரம் பிள்ளையவர்களால் எளிய இனிய தமிழ் நடையில் எழுதப்பட்டிருக்கின்றது. திருவருட்பாவிலுள்ள அகச்சான்றுகள் கொண்டே அடிகளது வரலாறு கூறப்பட்டிருக்கின்றது. 96 பக்கங் கொண்டது. விலை அணா 9.

கிடைக்குமிடம்: பரங்கிமலை, மறைமலையடிகள் கல்விக்கழகம்

2. சுகிர்தா (ஒரு புதுக்கதை.)

இதனை இயற்றியவர் சேலம் கவர்ன்மெண்டு இந்து பெண் பாடசாலையின் தலைமையுபாத்தியாயராகிய ஞான திரவியம் குமரேசன் அம்மாளவர்கள். இதன்கண் இந்துப்பெண் மக்களின் வருந்தத் தக்கதான நிலைமை எடுத்துக் கூறப்படுவதோடு இளமை மணம் கண்டிக்கப்படுகின்றது. இந்நூலின் நடை மிகவும் எளியவாயும், கற்பவர்க்கு மிகுந்த களிப்பூட்டுவதாயும் காணப்படுகின்றது. இதன்கண் ஏறக்குறைய இருநூறாக்கு மேலான அரிய பழமொழிகள் இடநோக்கி அமைக்கப் பெற்றிருக்கின்றன. இதன் கதைப்போக்கும் செவ்விவாய்ந்தது. ஒவ்வொரு பெண்டிரும் ஆடவரும் இதனைக் கற்க வேண்டுவது முதன்மையாகும். 222-பக்கம். இதன் விலை அணா 14.

நமது கழகத்திலும், சென்னை கிறிஸ்டியன் லிட்டெரச்சர் சொசைட்டியிலும், கிடைக்கப்பெறும்.

பல்லாவரம் பொதுநிலைக் கழகப் பேரவை.

'சமரச சன்மார்க்க சங்கம்' அல்லது பொது நிலைக்கழகம் என்பது 1911 ஆம் ஆண்டு ஏப்பிரல் திங்கள் 22 ஆம் நாள் ஆசிரியர் மறைமலை அடிகளால் பல்லாவரத்தின்கண் நிலை நிறுத்தப்பட்டது. பிறப்பு இறப்பு இல்லா எல்லாம் வல்ல முழு முதற்கடவுள் ஒருவரையே அன்பினால் வழிபட்டு பிறவியைத் தூய்மை செய்யும முறைகளும், எல்லா உயிர்களிடத்தும் அன்பும் அருளும் பூண்டு ஒழுகும் ஒழுக்கத்தின் உயர்வும் எங்கும் பரவுமாறு செய்தலே இதன் நோக்கம். பண்டைத் தமிழாசிரியராகிய தொல்காப்பியர், திருவள்ளுவர், நக்கீரர், மாணிக்க வாசகர், திருமூலர், திருநாவுக்கரசர், திருஞான சம்பந்தர், சுந்தரர், பட்டினத்தடிகள், மெய்கண்ட தேவர், தாயுமான அடிகள், இராமலிங்க அடிகள் முதலான ஞான குரவர்களும் அறிவுறுத்திய அருளுரைகள் அத்துணையும் இறைவனிடத்து அன்பும் உயிர்களிடத்து அருளும் என்னும் இருபேரொழுக்கங்களையே இருகண்களாகக் கொண்டு நிற்றலால், அவர்தந்த அவ்விரு கண்களைக்கொண்டே மக்கள் இறைவனைக் கண்டு அவன் திருவடிப் பேற்றினை எய்துதல் வேண்டுமென்பதே இதன் கோட்பாடு.

எல்லாம் வல்ல அம்பலவாணர்திருவருளால் மேற்குறிப்பிட்ட மூன்றும் வரும் தைத் திங்கள் பூசத்தன்று துவங்கி (1931 பிப்ரவரி, 2,3,4,5) நான்கு நாட்கள் நடைபெறும். தைப்பூசத்தன்று அம்பலவாணர்திருக்கோயிற்றிருக்குடமுழுக்கும்மாணிக்கவாசக நூல் நிலையத் திறப்பும், அந்நாள் மாலையில அம்பலவாணர் திருக்கூத்தின் உண்மையும், ஞானயோகமும் என்பது பற்றிய மறைமலையடிகளின் விரிவுரையும் நடைபெறும். அதற்கடுத்த மூன்று நாட்களிலும் பொது நிலைக்கழக நிறைவுவிழாப் பேரவை நடைபெறும் ; அம்மூன்று நாட்களிலும் கலைவல்ல அறிஞர்கள் தமிழிலும் ஆங்கிலத்திலும் அரிய பெரிய பொருள்களை எடுத்துச் சொற்பொழிவு நிகழ்த்துவார். அந்நாட்களில் மறைமலையடிகளும் 'தமிழும் அதன் பெரும்பயனும்' என்பது பற்றித் தமிழிலும், 'நம் நாட்டவர் முன்னேற்றம்' என்பது பற்றி ஆங்கிலத்திலும் பேருரை நிகழ்த்துவார்கள். அவ்விரிவு பின்னர் வெளிவரும்.

உணவு, வசதி, இருப்பிட வசதி, கட்டணம் முதலியவை கட்குப் **பல்லாவரம் பொதுநிலைக் கழகத்திற்கு** எழுதித் தெரிந்து **கொள்ளலாம்.**